DINAMALAR
National Tamil Daily
உலக தமிழர் செய்திகள்
ஏப்ரல் 26,2016 IST

சிங்கப்பூரில், தமிழ் மொழி விழா 2016ன் ஓர் அங்கமாக, வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சென்ற ஞாயிற்றுக்கிழமை 24-04-2016 அன்று, சிங்கப்பூரிலுள்ள உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில், "மனதில் உறுதி வேண்டும்" என்ற நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக நடத்தியது.
அடுத்த தலைமுறைக்கு தமிழ் மொழியை எடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு, தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இச்சங்கம் தமிழ் மொழியில் பயிற்சியளித்து, "மாணவர்கள் வழங்கும் கவிதை மாலை" என்ற புதிய அங்கமும் இளையர்களை ஈர்க்கும்வண்ணம் இடம்பெற்றது.

சிங்கப்பூரில் தமிழ் மொழி விழா 2016

"மனதில் உறுதி வேண்டும்" என்ற தலைப்பில் திரு கோபிநாத் சிறப்புரையாற்றினார். எதிர்மறையான சிந்தனைகளுக்கு எப்போதும் இடமளிக்கக் கூடாது என்றும், தமிழ் மொழியின் சிறப்புகளையும், தமிழர்களின் கலாச்சார மற்றும் பண்பாட்டுப் பின்னணிகளையும் நம் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.
சிங்கப்பூரிலுள்ள செம்பவாங் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், திரு விக்ரம் நாயர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். பேராசிரியர் முனைவர் திரு சுப திண்ணப்பன் ஆற்றிய தமிழ்ப்பணிகளைப் பாராட்டி, இச்சங்கம் அவருக்கு "ஜமாலியன் விருது" வழங்கி கௌரவித்தது.
சங்கத்தின் தலைவர், சிங்கப்பூர் பட்டயக் கணக்காய்வாளர் முனைவர் திரு மு.அ. காதர் தலைமையுரை ஆற்றினார்.
சங்கத்தின் செயலவை உறுப்பினர் திரு ஃபரீஜ் முஹம்மது நிகழ்ச்சியை வழிநடத்தினார். சங்கத்தின் துணைத் தலைவர் திரு மு. கலந்தர் மைதீன் நன்றி கூறினார்.
சுமார் 500க்கும் மேற்பட்ட சமூகத் தலைவர்களும், தமிழ் ஆர்வலர்களும், பொதுமக்களும், மாணவர்களும் கலந்து பயன் பெற்றனர்.
நமது செய்தியாளர் வெ. புருஷோத்தமன்

சிங்கப்பூரில் தமிழ் மொழி விழா 2016

சிங்கப்பூரில் தமிழ் மொழி விழா 2016

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்

சிங்கப்பூரில் நடத்திய 'மனதில் உறுதி வேண்டும்' நிகழ்ச்சி

விஜய் தொலைக்காட்சி கோபிநாத் பங்கேற்பு

சிங்கப்பூர், ஏப்.26-

சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் நடத்திய "நீயா நானா" புகழ் திரு கோபிநாத் வழங்கிய "மனதில் உறுதி வேண்டும்" நிகழ்ச்சி

தமிழ் மொழி விழா 2016ன் ஓர் அங்கமாக, வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சென்ற ஞாயிற்றுக்கிழமை 24-04-2016 அன்று, சிங்கப்பூரிலுள்ள உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில், விஜய் தொலைகாட்சி "நீயா நானா" புகழ் திரு கோபிநாத் வழங்கிய "மனதில் உறுதி வேண்டும்" என்ற நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக நடத்தியது.

அடுத்த தலைமுறைக்கு தமிழ் மொழியை எடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு, தொடக் கப் பள்ளி மற்றும் உயர் நிலைப் பள்ளி மாணவ மாணவி களுக்கு இச்சங்கம் தமிழ் மொழியில் பயிற்சியளித்து, "மாண வர்கள் வழங்கும் கவிதை மாலை" என்ற புதிய அங்கமும் இளையர்களை ஈர்க்கும் வண்ணம் இடம் பெற்றது.

"மனதில் உறுதி வேண் டும்" என்ற தலைப்பில் திரு கோபிநாத் சிறப்புரையாற் றினார். எதிர்மறை யான சிந்தனைகளுக்கு எப்போ தும் இடமளிக்கக் கூடாது என்றும், தமிழ் மொழியின் சிறப்புகளையும், தமிழர்களின் கலாச்சார மற்றும் பண்பாட்டுப் பின்னணி களையும் நம் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் வலியுறுத்தினார். தன்னம் பிக்கை என்பது நம்பிடமே இருக்கிறது; அதை நாம் சரியாக வெளிக்கொணர வேண்டும் என்றும், கடந்த காலக் கசப்பான நினைவுகளை முற்றிலும் களையவேண்டும் என்றும், அப்போதுதான் பிரகாசமான வாழ்வுக்கு அது வழிவகுக்கும் என்றும் நகைச்சுவைக் கலந்து அனைவரும் ரசிக்கும் வண்ணம் அவரது தன்முனைப்புச் சொற் பொழிவு அமைந்திருந்தது.

சிங்கப்பூரிலுள்ள செம்பவாங் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர், திரு விக்ரம் நாயர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, தமிழ் மொழி பேசுவதன் அவசியத்தை வலியுறுத்துவதோடு, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாண வர்கள் சங்கம் கடந்த ஆறு ஆண்டுகளில் 52 நிகழ்ச் சிகள் நடத்தி கல்வி சார்ந்த சமுதாயப்பணிகள் சிங்கப் பூரில் ஆற்றியிருப் பதைப் பாராட்டினார்.

கவிதை மாலை வழங்கிய மாணவ மாணவியர் களுக்கும், பூனைநு "ஹ" டுநுஎநுடு தேர்வில் உயர்தமிழ் உட்பட பல பாடங்களில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியருக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

முனைவர் திரு சுபதிண்ணப்பன் ஆற்றிய த மி ழ் ப் ப ணி க ளை ப் பாராட்டி, இச்சங்கம் அவருக்கு "ஜமாலியன் விருது" வழங்கி கௌரவித்தது.

சங்கத்தின் தலைவர், சிங்கப்பூர் பட்டயக் கணக்காய்வாளர் முனைவர் ஹாஜி மு.அ. காதர் ஆற்றிய தலைமையுரையில், "நாம் ஒவ்வொருவரும் இன்று முதல் தமிழ்மொழியிலேயே வீட்டில் பேச வேண்டும் என்றும், நாம் தமிழ் மொழி 'யைக் காப்பதுபோல, பயங்கரவாத மற்றும் தீவிரவாத மிரட்டல் களிலிருந்து நமது சிங்கப்பூர் தேசத்தை அதிக விழிப்பு ணர்வோடும், ஒற்றுமை யோடும் ஒருங் கிணைந்துக் காக்க வேண்டும்" என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

சங்கத்தின் செயலவை உறுப்பினர் ஃபரீத் முஹம்மது நிகழ்ச்சியை வழிநடத்தினார். சங்கத்தின் துணைத் தலைவர் மு.கலந்தர் மைதீன் நன்றி கூறினார்.

சுமார் 500க்கும் மேற்பட்ட சமூகத் தலைவர்களும், தமிழ் ஆர்வலர்களும், பொது மக்களும், மாணவர்களும் கலந்து பயன் பெற்றனர்.

சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் 5வது ஆண்டு நிறைவு விழா

சிங்கப்பூர்: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சிங்கப்பூர் கிளையின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா 22-11-2015 அன்று சிங்கப்பூரில் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கல்வியைக் கருப்பொருளாய் கொண்டு நிகழ்ந்த இவ்விழாவில், மலேசிய வானொலி மற்றும் தொலைக்காட்சிப் படைப்பாளர், வழக்குரைஞர் திரு எஸ். பாண்டித்துரை "கற்க கசடற" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக சிங்கப்பூரில் கல்வி சார்ந்த சமூகப் பணிகளை செய்து வரும் இச்சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு செய்யப்பட்டு, அதன் முதல் பிரதியை எம்.இ.எஸ். குழுமத்தின் தலைமை நிர்வாகி திரு எஸ். எம். அப்துல் ஜலீல் பெற்றுக் கொண்டார்.

மாணவர்கள் படைத்த கவிதை மாலை

கவிதை மாலை படைத்த பள்ளி மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார் நாடாளுமன்ற உறுப்பினர் திரு விக்ரம் நாயர் (நடுவில்). உடன் ஏற்பாட்டுக் குழுவினரும் முக்கிய பிரமுகர்களும். **படம்: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)**

தமிழ்மொழி விழா 2016ன் ஓர் அங்கமாக, வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), இம்மாதம் 24ஆம் தேதி அன்று உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில், 'விஜய்' தொலைக்காட்சியின் 'நீயா நானா' புகழ் திரு கோபிநாத் வழங்கிய 'மனதில் உறுதி வேண்டும்' என்ற நிகழ்ச்சியை நடத்தியது.

அடுத்த தலைமுறைக்கு தமிழ் மொழியை எடுத்துச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தோடு, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இச்சங்கம் தமிழ்மொழியில் பயிற்சியளித்து, மாணவர்கள் வழங்கும் 'கவிதை மாலை' என்ற புதிய அங்கமும் இளையர்களை ஈர்க்கும் வண்ணம் இடம்பெற்றது.

'மனதில் உறுதி வேண்டும்' என்ற தலைப்பில் திரு கோபிநாத் சிறப்புரையாற்றினார்.

எதிர்மறையான சிந்தனைகளுக்கு எப்போதும் இடமளிக்கக் கூடாது என்றும் தமிழ்மொழியின் சிறப்புகளையும் தமிழர்களின் கலாசார, பண்பாட்டுப் பின்னணிகளையும் நம் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தன்னம்பிக்கை என்பது நம்மிடமே இருக்கிறது; அதை நாம் சரியாக வெளிக்கொணர வேண்டும் என்றும் கடந்த காலக் கசப்பான நினைவுகளை முற்றிலும் களையவேண்டும் என்றும் அப்போதுதான் பிரகாசமான வாழ்வுக்கு அது வழிவகுக்கும் என்றும் நகைச்சுவை கலந்து அனைவரும் ரசிக்கும் வண்ணம் அவரது சொற்பொழிவு அமைந்திருந்தது.

செம்பவாங் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு விக்ரம் நாயர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தமிழ் மொழி பேசுவதன் அவசியத்தை வலியுறுத்துவதோடு, ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் கடந்த ஆறு ஆண்டுகளில் 52 நிகழ்ச்சிகள் நடத்தி கல்வி சார்ந்த சமுதாயப் பணிகள் சிங்கப்பூரில் ஆற்றியிருப்பதைப் பாராட்டினார்.

சிறப்பு விருந்தினர் கவிதை மாலை வழங்கிய மாணவ மாணவியர்களுக்கும், ஜிசிஇ மேல்நிலைத் தேர்வில் உயர்தமிழ் உட்பட பல பாடங்களில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியருக்கும் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

பேராசிரியர் முனைவர் திரு சுப. திண்ணப்பன் ஆற்றிய தமிழ்ப் பணிகளைப் பாராட்டி, இச்சங்கம் அவருக்கு 'ஜமாலியன் விருது' வழங்கி கௌரவித்தது.

சங்கத்தின் தலைவர் முனைவர் மு.அ. காதர் ஆற்றிய தலைமையுரையில், "நாம் ஒவ்வொருவரும் இன்று முதல் தமிழ் மொழியிலேயே வீட்டில் பேசவேண்டும் என்றும் நாம் தமிழ் மொழியைக் காப்பது போல, பயங்கரவாத மற்றும் தீவிரவாத மிரட்டல்களிலிருந்து நமது சிங்கப்பூர் தேசத்தை அதிக விழிப்புணர்வோடும் ஒற்றுமையோடும் ஒருங்கிணைந்து காக்கவேண்டும்," என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

சுமார் 500க்கும் மேற்பட்ட சமூகத் தலைவர்களும், தமிழ் ஆர்வலர்களும், பொதுமக்களும், மாணவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள்.

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா

(இடமிருந்து வலம்) கணிதப் பேராசிரியர் அமானுல்லாஹ், கல்லூரி முதல்வர் டாக்டர் முஹம்மது சாலிஹ், கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் டாக்டர் காஜா நஜீமுதீன், கல்லூரி செயலாளர் ஹாஜி ஜமால் முஹம்மது, சங்கத்தின் தலைவர் டாக்டர் காதர், எம்.இ.எஸ். குழுமத்தின் தலைமை நிர்வாகி அப்துல் ஜலீல்.
படம்: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் (சிங்கப்பூர் கிளை) ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக சிங்கப்பூரில் கல்வி சார்ந்த சமூகப் பணிகளைச் செய்துவரும் இச்சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு செய்யப்பட்டு, அதன் முதல் பிரதியை எம்.இ.எஸ். குழுமத்தின் தலைமை நிர்வாகி திரு எஸ்.எம். அப்துல் ஜலீல் பெற்றுக் கொண்டார்.

கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ். முஹம்மது சாலிஹ் தலைமையில் கல்லூரியின் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுதீன், துணைச் செயலாளர் எம்.ஜே. ஜமால் முஹம்மது ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் ஏ. முஹம்மது இப்ராஹீம், கூடுதல் துணை முதல்வர் டாக்டர் எஸ். இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் நிறைவு விழாவில் வாழ்த்துரை வழங்கினர்.

DINAMALAR
National Tamil Daily

நவம்பர் 24,2015 IST

உலக தமிழர் செய்திகள்

சிங்கப்பூரில் மாணவர் சங்க ஆண்டு நிறைவு விழா

சிங்கப்பூர் பொன் விழா ஆண்டில் , 50 நிகழ்வுகளை நிறைவு செய்து , ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவை , ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் கிளை , நவம்பர் 22 ஆம் தேதி மிகச் சிறப்பாக கொண்டாடியது .
உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு , ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ் . முஹம்மது சாலிஹ் தலைமை வகித்தார் .சினேகா முரளியின் கல்லூரிப் பண் பாடலோடு நிகழ்வு தொடங்கியது .
" பயங்கரவாத மிரட்டல்களை எதிர்நோக்கும் இன்றைய சூழ்நிலையில் , நாம் அனைவரும் ஒன்றுபட்டு மிகுந்த விழிப்புணர்வோடு செயல்பட்டு , சிங்கப்பூரின் பாதுகாப்பிற்கும் அமைதிக்கும் , நல்லிணக்கத்திற்கும் நமது பங்களிப்பை நல்க வேண்டும் " என சங்கத்தின் தலைவர் டாக்டர் எம் . முஹிய்யத்தீன் அப்துல் காதர் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார் .

கல்லூரியின் தாளாளர் டாக்டர் ஏ . கே . காஜா நஜிமுதீன் , துணைச் செயலாளர் எம். ஜே . ஜமால் முஹம்மது ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர் .கல்லூரி துணை முதல்வர் டாக்டர் ஏ. முஹம்மது இப்ராஹீம் , கூடுதல் துணை முதல்வர் டாக்டர் எஸ். இஸ்மாயில் முஹைதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் .
முனைவர் நாகூர் ரூபி எழுதிய கல்லூரி பற்றிய சிறப்புப் பாடலை நூருல் ஹுதா இசைக் குழுவினர் பாடி அரங்கை அதிர வைத்தனர் . சங்கத்தின் பல்துறைப் பணி பற்றிய காணொளியும் இடம் பெற்றது .சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு கண்டது . முதல் பிரதியை எம். இ . எஸ். குழுமத் தலைமை நிர்வாக இயக்குனர் வள்ளல் எஸ். எம். அப்துல் ஜலீல் பெற்றுக் கொண்டார் .முத்தாய்ப்பு நிகழ்வாக , கல்வியைக் கருப் பொருளாகக் கொண்டு நிகழ்ந்த இவ்விழாவில் , மலேசிய வானொலி - தொலைக் காட்சிப் படைப்பாளர் வழக்குரைஞர் எஸ். பாண்டித்துரை " கற்க கசடற " என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார் .
நிகழ்வினை மு . அப்துல் சுபஹான் ,ஃபரீஜ் முஹம்மது ஆகியோர் சுவைபட நெறிப்படுத்தினர் .பட்டயக் கணக்காய்வாளர் கவிஞர் டாக்டர் முஹிய்யத்தீன் அப்துல் காதர் நன்றி நவில நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.
நமது செய்தியாளர் வெ.புருஷோத்தமன்

சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா

சிங்கப்பூர், நவ28-

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)யின் ஐந் தாம் ஆண்டு நிறைவு விழா சென்ற ஞாயிற்றுக்கிழமை 22-11-2015 அன்று சிங்கப்பூரில் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கல்வியைக்கருப்பொருளாய் கொண்டுநிகழ்ந்த இவ்விழாவில், மலேசிய வானொலி மற்றும் தொலைக்காட்சிப் படைப் பாளர், வழக்குரைஞர் எஸ்பாண்டித்துரை "கற்க கசடற" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக சிங்கப்பூரில் கல்வி சார்ந்த சமூ கப் பணிகளை செய்துவரும், இச்சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு செய்யப்பட்டு, அதன் முதல் பிரதியை எம்.இஎஸ். குழுமத்தின் தலைமை நிர்வாகி திரு எஸ். எம். அப்துல் ஜலீல் பெற்றுக்கொண்டார்.

"பயங்கரவாத மிரட்டல் களை எதிர்நோக்கும் இன்றைய சூழ்நிலையில், நாம் அனை வரும் ஒன்றுபட்டு மிகுந்த விழிப்புணர்வோடு செயல்பட்டு, சிங்கப்பூரின் பாதுகாப்பிற்கும் அமைதிக்கும், நமது பங்க ளிப்பை வழங்கவேண்டும்" என்று தனது வரவேற்புரையில் கேட்டுக்கொண்டார், சங்கத்தின் தலைவர் கணக்காய்வாளர், டாக்டர் காதர்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ். முஹம்மது சாலிஹ் தலை மையில், கல்லூரியின் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுதீன், துணைச் செயலாளர் எம். ஜே. ஜமால் முஹம்மது ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் ஏ. முஹம்மது இப்ராஹீம், கூடுதல் துணை முதல்வர் டாக்டர் எஸ். இஸ்மாயில் முகைதீன் ஆகி யோர் வாழ்த்துரை வழங்கினர்.

டாக்டர் நாகூர் ரூமி எழுதிய கல்லூரியைப் பற்றிய சிறப்புப் பாடலை "நூருல் ஹுதா" இசைக்குழுவினர் வழங்கியது செவிகளுக்கு விருந்தாக அமைந் திருந்தது.

சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் 5வது ஆண்டு நிறைவு விழா

சிங்கப்பூர்: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சிங்கப்பூர் கிளையின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா 22-11-2015 அன்று சிங்கப்பூரில் உமறுப்புலவர் தமிழ் மொழி நிலைய உள்ளரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கல்வியைக் கருப்பொருளாய் கொண்டு நிகழ்ந்த இவ்விழாவில், மலேசிய வானொலி மற்றும் தொலைக்காட்சிப் படைப்பாளர், வழக்குரைஞர் திரு எஸ். பாண்டித்துரை "கற்க கசடற" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக சிங்கப்பூரில் கல்வி சார்ந்த சமூகப் பணிகளை செய்து வரும் இச்சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு சிறப்பு மலர் வெளியீடு செய்யப்பட்டு, அதன் முதல் பிரதியை எம்.இ.எஸ். குழுமத்தின் தலைமை நிர்வாகி திரு எஸ். எம். அப்துல் ஜலீல் பெற்றுக் கொண்டார்.

"பயங்கரவாத மிரட்டல்களை எதிர்நோக்கும் இன்றைய சூழ்நிலையில், நாம் அனைவரும் ஒன்றுபட்டு மிகுந்த விழிப்புணர்வோடு செயல்பட்டு, சிங்கப்பூரின் பாதுகாப்பிற்கும், அமைதிக்கும் நமது பங்களிப்பை வழங்க வேண்டும்" என்று தனது வரவேற்புரையில் கேட்டுக் கொண்டார், சங்கத்தின் தலைவர் கணக்காய்வாளர், டாக்டர் திரு காதர்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ். முஹம்மது சாலிஹ் தலைமையில், கல்லூரியின் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுதீன், துணைச் செயலாளர் எம். ஜே. ஜமால் முஹம்மது ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் ஏ. முஹம்மது இப்ராஹீம், கூடுதல் துணை முதல்வர் டாக்டர் எஸ். இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். டாக்டர் நாகூர் ரூமி எழுதிய கல்லூரியைப் பற்றிய சிறப்புப் பாடலை "நூருல் ஹுதா" இசைக்குழுவினர் வழங்கியது செவிகளுக்கு விருந்தாக அமைந்திருந்தது.

உள்ளூர் தமிழ் எழுத்தாளர்களுக்கு 'ஜமாலியன்' விருது

கவிஞர் மு. மேத்தாவுக்கு (நடுவில்) பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்குகிறார் சிண்டாவின் தலைமை நிர்வாக அதிகாரி திரு கே. பரதன் (இடது). வலப்பக்கம், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் (சிங்கப்பூர் கிளை) தலைவர் முனைவர் மு. அ. காதர். **படம்: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)**

தமிழ் மொழி விழாவின் ஓர் அங்கமாக வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவில், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), நேற்று முன்தினம் மாலை உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையத்தில், கவிஞர் மு. மேத்தாவின் 'நட்சத்திர ஜன்னலில்' என்ற நிகழ்ச்சியை நடத்தியது.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சிங்கப்பூரின் முதல் பிரதமர் அமரர் திரு லீ குவான் இயூவுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ராஃபிள்ஸ் பெண்கள் பள்ளியின் மாணவி செல்வி சினேகா முரளி தமிழ் வாழ்த்துப் பாடலைப் பாடியதைத் தொடர்ந்து திரு லீ குவான் இயூ பற்றிய சிறப்புக் காணொளி காண்பிக்கப்பட்டது.

தலைமையுரையும், வரவேற்புரையும் ஆற்றிய சங்கத்தின் தலைவர் முனைவர் காதர், சிங்கை வாழ் தமிழர்கள் வீட்டிலும், நாட்டிலும் அதிக அளவில் தமிழில் பேச வேண்டும் என்றும், தமிழர்கள் சிங்கப்பூரில் மக்கள் தொகையிலும், சொந்தத் தொழில் செய்வதிலும், கல்வி மேம்பாட்டிலும் பெரிய வளர்ச்சிக் காண்பது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட, நாடாளுமன்ற நியமன உறுப்பினர் திரு. கி. கார்த்திகேயன் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாடலைப் பாடிப் பரவசப்படுத்தினார். தமிழர்கள் தமிழர்களைச் சந்திக்கும்பொழுது, தமிழில் பேசவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

முனைவர் காதர் எழுதிய "நாம் அன்னைத் தமிழை வாழ்த்திடவே ஒன்று கூடுவோம்" என்ற பாடலை, பாடகர் மு. அ. ஜெய்னுல் ஆபிதீன் பாட, "தமிழை நேசிப்போம்; தமிழில் பேசுவோம்" என்ற பாடல் வரிகளை, சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் அனை வரும் மேடையில் சேர்ந்து பாடியது அரங்கம் முழுவதிலும் தமிழ் மணத்தைப் பரப்பியது.

சிங்கப்பூரில் தமிழ் வளர்ச்சிக்குப் பங்காற்றிய மூத்த எழுத்தாளர் திரு ஜே.எம். சாலி, கவிஞர் திரு க.து.மு. இக்பால், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் திரு நா. ஆண்டியப்பன், தமிழாசிரியர் திரு மு.ஆ. மசூது, எழுத்தாளர் ஷா நவாஸ் ஆகியோருக்கு அவர்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டி, 'ஜமாலியன்' விருது வழங்கப்பட்டது.

சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட தமிழ்துறைப் பேராசிரியரும், திரைப்படப் பாடலாசிரியருமான கவிஞர் மு. மேத்தா, திரைப்படப் பாடல்கள் எழுதிய அனுபவங்கள், மற்ற கவிஞர்களின் தமிழ் ஆற்றல், பாரதிதாசனின் ஒப்பற்ற வரிகளை குறிப்பிட்டு இலக்கிய உரை நிகழ்த்தினார்.

தாம் விழாமல் இருப்பதற்கு விழா எடுப்பவர்களுக்கு மத்தியில், தமிழ் மொழி விழாமல் இருப்பதற்கு ஒரு மாதம் முழுவதும் விழாவை ஒருங்கிணைக்கும் வளர்தமிழ் இயக்கத்தை அவர் பாராட்டினார்.

"நம் எல்லோருக்கும் தாய் நாடு உண்டு. ஆனால், அமரர் லீ குவான் இயூ ஒரு தேசத்துக்கே தாயாக விளங்கியுள்ளார்" என்று புகழாரம் சூட்டினார்.

"நட்சத்திர ஜன்னலில் வழியாக வானம்தான் சிங்கப்பூரை எட்டிப் பார்க்குது; வியக்குது; மலைக்குது; மகிழுது," என்று வர்ணித்தார் கவிஞர் மு. மேத்தா. சுமார் 400 பேர் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்து தமிழ்ச் சுவை பருகி மகிழ்ந்தனர்.

செய்தி: மு. அ. காதர்

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)

தமிழ் மொழி விழா - 18 ஏப்ரல் 2015
கவிஞர் மு. மேத்தாவின் “நட்சத்திர ஜன்னலில்” நிகழ்ச்சி

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)

தமிழ் மொழி விழா - 18 ஏப்ரல் 2015
கவிஞர் மு. மேத்தாவின் “நட்சத்திர ஜன்னலில்” நிகழ்ச்சி

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)

தமிழ் மொழி விழா - 18 ஏப்ரல் 2015
கவிஞர் மு. மேத்தாவின் “நட்சத்திர ஜன்னலில்” நிகழ்ச்சி

ஜமால் முகம்மது கல்லூரி 64–வது ஆண்டு விழா: பெரம்பலூர் கலெக்டர் தரேஸ் அகமது பங்கேற்பு

திருச்சி,மார்ச்.26 –

ஜமால் முகம்மது கல்லூரியின் 64–வது கல்லூரி நாள் விழா அப்துல் கபூர் குளிர்மைக் கலையரங்கில் நடைபெற்றது. பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ் அகமது, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 207 மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:–

என்னைப்போல் கலெக்டராக வேண்டும் என்பது பத்தாம் வகுப்பு தேர்வு எழுத விரும்பிய ஒரு சிறுமியின் கனவு. அதைப் போல் வாழ்வின் நோக்கம் தெளிவாக இருக்கவேண்டும். இளைஞர்களே, உங்கள் மனதை பக்குவபடுத்துங்கள். எது தேவையோ அதைப்பற்றிக் கனவு காணுங்கள். நேரான பாதையைத் தேடிக் கண்டுபிடித்துப் பிறருக்கு உதவி செய்து நல்ல குடிமக்களாய் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்.

இவ்வாறு மாவட்ட கலெக்டர் தரேஸ் அகமது பேசினார்.

25 ஆண்டுகள் சிறப்புடன் பணியாற்றிய கணிப்பொறித்துறை பேராசிரியர் ஏ.ஆர். முகம்மது ஷானவாஸ், ஆங்கிலத்துறை பேராசிரியர் ஏ.முகம்மது முஸ்தபா, ஹிந்தித்துறைத் தலைவர் ஷேக் கரிமுல்லாஹ், அரபித்துறை பேராசிரியர் ஏ.அப்துல் காதர், இயற்பியல் துறைத் தலைவர் ஜமால் முகம்மது ஜாபர், பிரெஞ்சுத் துறைத் தலைவர் பேராசிரியர் எம்.முகம்மது சிராஜ் ஆகியோர் கல்லூரி நிர்வாகத்தினாரால் பரிசு வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். 25 ஆண்டுகள் சிறப்புடன் பணியாற்றிய அலுவலக மேலாளர் சண்முகவேல், அலுவலர் தாஜ்தீன் உள்ளிட்டோர் கல்லூரி நிர்வாகத்தினாரால் சிறப்பிக்கப்பட்டனர்.

பணி ஓய்வு பெறும் உருதுத் துறைத் தலைவர் பி. அகமது பாஷா, வணிகவியல் துறைத் தலைவர் பி.எம். மீரா முகைதீன் ஆகியோர் கல்லூரி நிர்வாகத்தினாரால் பரிசு வழங்கி சிறப்பிக்கப்பட்டனர். பணி ஓய்வு பெறும் ஆசிரியரல்லா அலுவலர்கள் நூர்தீன், பிரான்சிஸ் ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர்.

பாரதிதாசன் பல்கலைக் கழக ஒருங்கிணைந்த தகுதித் தேர்வில் இளநிலை பட்டப் பிரிவில் 5 மாணவர்களும், முதுநிலைப் பட்டப் பிரிவில் 10 மாணவர்களும் சிறப்பு தகுதி (ரேங்க்) பெற்றமைக்காக கல்லூரி நிர்வாகத்தினரால் கவுரவிக்கப்பட்டனர். காஜாமியான் தங்கப்பதக்கம் இளநிலை கணிப்பொறித்துறை மாணவர் எம். இப்ராகிம்ஷா பெற்றார். மேலும் மூன்று மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

மொழிப்பாடங்களில் முதல் இரண்டு இடங்கள் பெற்ற 21 மாணவர்களுக்கும் இளநிலை மற்றும் முதுநிலை பாடங்களில் சிறப்பிடம் பெற்ற 79 மாணவர்களுக்கு பரிசுகளும், கல்விக்கான சிறப்பு விருதுகள் 64 மாணவர்களுக்கும், கல்விசார் திறன்களுக்காக 9 மாணவர்களுக்கும், விளையாட்டுத் துறையில் பல்கலைக்கழகத்தில் சிறப்பிடம் பெற்ற 15 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. ஜமால் முகம்மது கல்லூரியின் அர்ஜூனா விருது டி. தர்மராஜ் (இளநிலை வரலாறு) என்ற மாணவருக்கு வழங்கப்பட்டது.

கல்லூரி ஆட்சி மன்றக்குழுவின் செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜீமுதீன், பொருளாளர் கே.ஏ. கலீல் அகமது, உதவி செயலாளர் ஹாஜி. எம். ஜே. ஜமால் முகம்மது,

முன்னாள் செயலாளரும் தாளாளருமான எம்.ஜே.எம். அப்துல் கபூர் சாஹிப், கூடுதல் துணை முதல்வர். எஸ். இஸ்மாயில் மொகைதீன், பேராசிரியர்கள், விருந்தினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

முன்னதாக கல்லூரி முதல்வர் எஸ். முகம்மது சாலிஹ் வரவேற்புரை நிகழ்த்தி ஆண்டறிக்கை வாசித்தார். நிறைவாக துணை முதல்வர் எ.முகம்மது இப்ராஹிம் நன்றி கூறினார்.

இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2013 2015
TN /PMG(CCR) WPP258/2013 15

மணி 28 சுடர் 282 | ஹிஜ்ரி 1436 ஜமாத்துல் ஆகிர் 06 | திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 13 | சென்னை 27.03.2015 வெள்ளி | வெளியீடு 28.03.2015 சனி | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி 64-வது கல்லூரி விழா

207 மாணவர்களுக்கு பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பரிசுகளை வழங்கினார்

திருச்சி, மார்ச் 27-

ஜமால் முகம்மது கல்லூரியின் 64வது கல்லூரி நாள் அப்துல் கபூர் குளிர் மைக் கலையரங்கில் நடை பெற்றது. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அகமது, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தி 207 மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

ஒவ்வொரு மாணவரும் வாழ்க்கையில் சிறப்பாக முன்னேற வேண்டும். நல்ல முடிவுகள் எடுத்து பழகுங்கள். நேரான பாதையில் செல்லுங்கள். சரியான முடிவு எடுப்பது அவ்வளவு சுலபமல்ல. இளைஞர்களே, உங்கள் மனதை பக்குவப் படுத்துங்கள். எது தேவையோ அதைப்பற்றிக் கனவு காணுங்கள். நேரான பாதையைத் தேடிக்கண்டு பிடித்துப் பிறருக்கு உதவி செய்து நல்ல குடிமக்களாய் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்'.என்றார்.

25 ஆண்டுகள் சிறப்புடன் பணியாற்றிய கணிப்பொறித்துறை பேராசிரியர் முனைவர் ஏ.ஆர்.முகம்மது ஷானவாஸ், ஆங்கிலத் துறை பேராசிரியர் ஏ. முகம்மது முஸ்தபா, ஹிந்தித்துறைத் தலைவர் ஷேக் கரிமுல்லாஹ், அரபித்துறை பேராசிரியர் ஏ. அப்துல் காதர், இயற்பியல் துறைத் தலைவர். ஜமால் முகம்மது ஜாபர், பிரெஞ்சுத், துறைத் தலைவர் பேராசிரியர் எம்.முகம்மதுசிராஜ் ஆகியோர் கல்லூரி நிர்வாகத்தினாரால் பரிசு வழங்கி சிறப்பிக்கப் பட்டனர். 25 ஆண்டுகள் சிறப்புடன் பணியாற்றிய அலுவலக மேலாளர், சண்முகவேல், அலுவலர் தாஜ்தீன் உள்ளிட்டோர் கல்லூரி நிர்வாகத்தினாரால் சிறப்பிக்கப்பட்டனர்.

பணி ஓய்வு பெறும் உருதுத் துறைத் தலைவர் பி.அகமது பாஷா, வணிகவியல் துறைத் தலைவர் பி.எம். மீரா முகைதீன், ஆகியோர் கல்லூரி நிர்வாகத்தினாரால் பரிசு வழங்கி சிறப்பிக்கப் பட்டனர். பணி ஓய்வு பெறும் ஆசிரியரல்லா அலுவலர்கள் நூர்தீன், பிரான்சிஸ் ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர்.

பாரதிதாசன் பல்கலைக் கழக ஒருங்கிணைந்த தகுதித் தேர்வில் இளநிலை பட்டப் பிரிவில் 5 மாணவர்களும், முதுநிலைப்பட்டப் பிரி வில் 10 மாணவர்களும் சிறப்பு தகுதி (ரேங்க்) பெற்றமைக்காக கல்லூரி நிர்வாகத்தினரால் கவுரவிக்கப் பட்டனர். காஜாமியான் தங்கப்பதக்கம் இளநிலை கணிப்பொறித்துறை மாண வர் எம். இப்ராகிம்ஷா பெற்றார். மேலும் மூன்று மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

மொழிப்பாடங்களில் முதல் இரண்டு இடங்கள் பெற்ற 21 மாணவர்களுக்கும் இளநிலை மற்றும் முதுநிலை பாடங்களில் சிறப்பிடம் பெற்ற 79 மாணவர்களுக்கு பரிசுகளும், கல்விக்கான சிறப்பு விருதுகள் 64 மாணவர்களுக்கும், கல்விசார் திறன்களுக்காக 9 மாணவர்களுக்கும், விளையாட்டுத் துறையில் பல்கலைக் கழகத்தில் சிறப்பிடம் பெற்ற 15 மாணவர்களுக்கும் வழங்கப் பட்டன. ஜமால் முகம்மது கல்லூரியின் அர்ஜூனா விருது டி.தர்மராஜ் (இளநிலை வரலாறு) என்ற மாணவர்க்கு வழங்கப்பட்டது.

கல்லூரி ஆட்சி மன்றக்குழுவின் செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர். ஏ.கே. காஜா நஜீமுதீன் பொருளாளர் கே.ஏ. கலீல் அகமது உதவி செயலாளர் ஹாஜி. எம். ஜே. ஜமால் முகம்மது முன்னாள் செயலாளர் மற்றும் தாளாளர் ஹாஜி. எம்.ஜே.எம். அப்துல் கபூர் சாஹிப் கூடுதல் துணை முதல்வர். எஸ்.இஸ்மாயில் மொகைதீன், பேராசிரியர்கள், விருந்தினர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். முன்னதாக கல்லூரி முதல்வர் எஸ்.முகம்மது சாலிஹ் வரவேற்புரை நிகழ்த்தி ஆண்டறிக்கை வாசித்தார். நிறைவாக துணை முதல்வர். எ.முகம்மது இப்ராஹிம் நன்றி கூறினார். இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றன.

Perambalur District collector Dr. Darez Ahamed participated in the Jamal Mohamed College 64th anniversary and distributed 207 prizes and awards to fifteen students of our college who secured University Ranks in the combined BARD University . M. Ibramsha (B.Sc. Computer Science) received Khajamian Gold Medal, F. Mohamed Hamidur Rahman (MBA), N. Imam Sathik Jafar Ali Khan (MCA), SRM Group Gold Medals, Imam Sathik Jafar Ali Khan. N (MCA) all received AVM Jafardeen-Noorjahan Trust Gold Medal, Dhinesh Kumar. A (M.Sc. Zoology) received Dr. ALagiriswamy Medal, R. Saravanan (B.Sc. Botany), S. Sheik Mohamed (M.Sc. Botany) received Prof. M. Purushothaman Medals. 21 students had been given proficiency prizes in languages. 79 students got proficiency prizes in different subjects. 15 students had been awarded with Sports Ambassador Awards. Arjuna of Jamal award was given to T. Dharmaraj (II BA History). Dr. A.K. Khaja Nazeemudeen, Secretary & Correspondent, Hajee. K.A. Khaleel Ahamed Sahib, Treasurer, Hajee. M.J. Jamal Mohamed Sahib, Assistant Secretary, Hajee. MJM. Abdul Gafoor Sahib, Former Secretary & Correspondent, Dr. S. Ismail Mohideen, Additional Vice Principal, Professors and former professors, Students, Parents graced the occasion. Earlier, Dr. S. Mohamed Salique, Principal welcomed the gathering and Dr. A. Mohamed Ibraheem, Vice Principal proposed vote of thanks.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), ‘‘சமய நல்லிணக்க குடும்பதின நிகழ்ச்சி’’ சிங்கப்பூர் கிழக்கு கடற்கரைப் பூங்காவில் மிகச் சிறப்பாக நடத்தியது. மாணவ மாணவிகளுக்கான ஓவியப்போட்டி, மணலில் வீடுகட்டும் போட்டி, பெற்றோர்களுக்கான போட்டி போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

–TPTC Edition–

ISO 9001:2008
சிவ சிதம்பரம்பிள்ளை
ஜுவல்லரி
(Since 1947)
1526, தெற்கலங்கம்,
தஞ்சாவூர். Ph:274297

தினமலர்

நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்

RAMRAJ
GENXT
வெல்க்ரோ பாக்கெட் வேட்டிகள்
இளைய தலைமுறைக்கான
நவீன வேட்டிகள் ...

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)
07 MAR 2015
GENERAL LIBRARY, TRICHY-20

◆ திருச்சி ◆ சனி ◆ மார்ச் 7 2015 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | ◆ 20 பக்கம் 500 காசு ◆ மலர் 64 ◆ இதழ் 182

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் நடந்த கருத்தரங்கில் விழா மலரை கல்லூரி தாளாளர் காஜா நஜிமுதீன் வெளியிட பொருளாளர் கலீல் அகமது பெற்றுக் கொண்டார்.

ஜமால் முகமது கல்லூரியில் கருத்தரங்கம்

திருச்சி, மார்ச் 7–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தகவல் தொழில் நுட்பவியல் துறை சார்பில் மாநில அளவிலான ஒரு நாள் கணினி அறிவியல் கருத்தரங்கம் நடந்தது.

கல்லூரி முதல்வர் முகமது சாலிகு தலைமை வகித்துப் பேசினார். புதுச்சேரி பொறியியல் கல்லூரி பேராசிரியர் சகாய ராஜ் பிரான்சிஸ் கருத்தரங்கை துவக்கி வைத்துப் பேசினார். கல்லூரி தாளர்ளர் காஜா நஜிமுதீன் கருத்தரங்க மலரை வெளியிட முதல் பிரதியை பொருளாளர் கலீல் அகமது பெற்றுக்கொண்டார். முன்னதாக துறைத் தலைவர் அப்துல் காதர் நிகால் வரவேற்றார். முகமது இலியாஸ் நன்றி கூறினார். கருத்தரங்கில் பல்வேறு கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்வேறு பல்கலைக்கழகங்களில் இருந்து பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவ மாணவிகள் ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

கல்லூரிகளுக்கிடையேயான

ஐஓபி சுழற்கோப்பை வாலிபால் போட்டி

திருச்சி, மார்ச் 2: 8 கல்லூரிகள் பங்கேற்ற மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான ஜமால் முகம்மது கல்லூரியால் நடத்தப்படும் ஐஓபி சுழற்கோப் பைக்கான வாலிபால் போட்டி லீக்மற்றும்நாக்அவுட்முறையில் நடைப்பெற்றது.

இதில், சத்தியபாமா பல்க லைக்கழகம், தூய இருதய கல் லூரியை 25:18 25:18 25:18 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது. ஜமால் முகம்மது கல்லூரி, தூய வளனார் கல்லூ ரியை 25:16, 25:11, 25:12 புள்ளிகள் கணக்கில் வென்றது.

டி.பி.ஜெயின் கல்லூரி, ஜமால் முகம்மது கல்லூரி ஏ அணியை 25:20, 25:21, 25:14 புள்ளிகள் கணக்கில் வென்றது. சங்கரா பல்கலைக்கழகம்,ஜமால் முகம்மது கல்லூரியை 25:15 25:15, 25:24 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

http://www.maalaimalar.com
Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

திருச்சி 1-3-2015 (ஞாயிற்றுக்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ மலர் 38 இதழ் 76

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தகவல் தொழில் நுட்பவியல் துறை சார்பில் மாநில அளவிலான ஒரு நாள் கணினி அறிவியல் கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கின் தொடக்க விழா தகவல் தொழில் நுட்பவியல் துறையின் கருத்தரங்கு அரங்கில் நடைபெற்றது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

தகவல் தொழில் நுட்பவியல் துறை சார்பில் மாநில கருத்தரங்கம்

திருச்சி, மார்ச்.1–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தகவல் தொழில் நுட்பவியல் துறை சார்பில் மாநில அளவிலான ஒரு நாள் கணினி அறிவியல் கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கின் தொடக்க விழா தகவல் தொழில் நுட்பவியல் துறையின் கருத்தரங்கு அரங்கில் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் முனைவர் முகமது சாலிகு தலைமை வகித்து பேசினார். புதுச்சேரி பொறியியல் கல்லூரி, முனைவர். எப். சகாயராஜ் பிரான்சிஸ் கருத்தரங்கை தொடங்கி வைத்தார். கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் முனைவர். நஜீமுதீன் சாகிப் கருத்தரங்கின் ஆய்வுக்கட்டுரை அடங்கிய புத்தகத்தை வெளியிட்டார். பொருளாளர் கலீல் அகமது சாகிப் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார். முகமது இலியாஸ் நன்றி கூறினார். முன்னதாக தகவல் தொழில் நுட்பவியல் துறைத் தலைவர் மற்றும் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் அப்துல் காதர் நிகால் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் முனைவர். காஜா நஜீமுதீன் துணை முதல்வர் முனைவர் ஆ. முகம்மது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர். எஸ்.இஸ்மாயில் மொஹிதீன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். துணை முதல்வர் (சுய நிதிப்பிரிவு) முனைவர் ஆ.கேஷக்முகம்மது, இயக்குனர் மு. அப்துல் சமது, விடுதி இயக்குனர்கள் பேராசிரியர் முகமது பாஜில், மற்றும் பேராசிரியர். எம்.ஏ. ஜமால் முகமது யாசின் சுபைர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாநில அள்வில் நடைபெற்ற தகவல் தொழில் நுட்பவியல் கருத்தரங்கில் பல்வேறு கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்வேறு பல்கலைக்கழகங்களில் உள்ள பேராசிரியர்கள் , ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவ,மாணவியர்கள் கலந்து கொண்டு ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

இந்தகருத்தரங்கின் நிறைவு விழா தகவல் தொழில் நுட்பவியல் துறையின் கருத்தரங்கு அரங்கில் நடைபெற்றது. முனைவர். காஜா நஜ்முதீன் சாகிப், கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் இந்த கருத்தரங்கின் நிறைவுரையாற்றினார். பேராசிரியர் கைருன்னிஸா நன்றி கூறினார். முன்னதாக கணினி அறிவியல் துறை பேராசிரியர் முனைவர். அப்துல் ரசாக் வழங்கினார்.

தகவல் தொழில்நுட்பத் துறைத் தலைவர் அப்துல் காதர் நிகால் மற்றும் துறைப் பேராசிரியர்கள் கருத்தரங்கு பணிகளை செய்தனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

திருச்சி 1-3-2015 (ஞாயிற்றுக்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ மலர் 38 இதழ் 76

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான அறிவுதிறன்போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிக்கு பரிசு வழங்கப்பட்ட போது எடுத்தபடம்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி

கணிதத்துறை சார்பில் மாநில அளவில் அறிவு திறன் போட்டி

காமராஜர் பல்கலை கழக அணிக்கு சாம்பியன் பட்டம்

திருச்சி, மார்ச்.1–

திருச்சி ஜமால் முகமது கல்லூரி கணிதத் துறை சார்பாக மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான அறிவுதிறன் சார் போட்டிகள் நடைபெற்றது.

டம்ப்–பி, கெஸ் மீ, மேத் ஒன்டர், ரங்கோலி, மாஸ்டர் மைன்ட், மேத் குவிஸ் முதலிய ஆறு போட்டிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் பரிசளிப்பு விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் முகமது சாலிகு தலைமை வகித்து தலைமையுரையாற்றினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜ்முதீன் மேத்மேசன் என்ற கணித மலரை வெளியிட்டு, அறிவுதிறன் சார் போட்டிகளில் வெற்றி பெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிக்கு ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வழங்கினார்.

கல்லூரியின் முன்னாள் கணிதத் துறை தலைவர் முனைவர் ஜி. ராமசந்திரன் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்லூரிகளில் இருந்து சுமார் 270 மாணவ–மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

விழாவில் கல்லூரி துணை முதல்வர் ஏ. முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் மற்றும் துறைத் தலைவர் முனைவர். எஸ்.இஸ்மாயில் முகைதீன் முதலியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக கணித சங்க செயலாளர் கலைவாணி வரவேற்றார். இறுதியாக கணித சங்க மாணவ செயலாளர் எம். பிரேம்குமார் நன்றிகூறினார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை இந்நிகழ்ச்சியின் அமைப்பு செயலர்கள் முனைவர் பி.முருகானந்தம், யு. அபுதாஹிர் மற்றும் ஷர்மிளாபானு,துறைப்பேராசிரியர்கள் மற்றும் மாணவ உறுப் பினர்கள்ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

MOHAMAD IDRIS BROS.
KIBS
கிப்ஸ்
HANDLOOM TEXTILES
கிப்ஸ்
■ லுங்கிகள் ■ பனியன்கள்
■ ஜட்டிகள் ■ கைக்குட்டைகள்
தயாரித்து விநியோகிப்பவர்கள்:
முகமது இத்ரீஸ் பிரதர்ஸ் (பி) லிட்.,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
044 - 2522 1371 / 2522 1372 / 2522 1373

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2013-2015
TN /PMG(CCR) WPP258/2013-15

மணி - 28 சுடர் - 255 | ஹிஜ்ரி 1436 ஜமாத்துல் அவ்வல் - 08 | திருவள்ளுவர் ஆண்டு - 2046 மாசி - 16 | சென்னை 28.02.2015 சனி | வெளியூர் 01.03.2015 ஞாயிறு | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் - 4 | விலை ₹ 3

திருச்சி ஜமால் முஹம்மது கல்வியியல்

கல்லூரிகளுக்கிடையிலான அறிவு திறன்கள் போட்டி

திருச்சி, பிப்.28-

ஜமால் முகமது கல் லூரி கணிதத்துறை சார் பாக மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடை யிலான அறிவுதிறன் சார் போட்டிகள் திருச்சிராப் பள்ளி ஜமால் முகமது கல் லூரி கணிதத்துறை சார் பாக மாநில அளவிலான கல்லூரி களுக்கு இடையிலான அறிவுதிறன் சார் போட் டிகள் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியின் பரிசளிப்பு விழா விற்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் முகமது சாலிகு தலைமை வகித்து தலைமை யுரையாற்றினார்.

கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜ்முதீன் மேத்மேசன் என்ற கணித மலரை வெளியிட்டு, அறிவு திறன் சார் போட்டிகளில் வெற்றி பெற்ற மதுரை காம ராஜர், பல் கலைக்கழக அணிக்கு ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வழங்கினார். கல்லூரியின் முன்னாள் கணி தத்துறை தலைவர் முனைவர் ஜி. ராமசந் திரன் சிறப்புரை யாற்றினார். இவ்விழாவில் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு கல்லூரிகளில் இருந்து சுமார் 270 மாணவ-மாணவியர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப் பிடத்தக்கது.

இவ்விழாவில் கல்லூரி துணை முதல்வர் ஏ. முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர், மற்றும் துறைத் தலைவர் முனைவர். எஸ்.இஸ்மாயில் முகைதீன், முதலியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக கணித சங்க செயலாளர் கலைவாணி வரவேற்புரையாற்றினார்.

இறுதியாக கணித சங்க மாணவ செயலாளர் எம். பிரேம்குமார் நன்றியுரை யாற்றினார்.

இவ்விழாவிற்கான ஏற்பா டுகளை இந்நிகழ்ச்சியின் அமைப்பு செயலர்கள் முனை வர் பி.முருகானந்தம், யு. அபுதாஹிர் மற்றும் ஷர்மிளா பானு, துறைப் பேராசிரி யர்கள் மற்றும் மாணவ உறுப் பினர்கள் முதலியோர் சிறப் பாக செய்திருந்தனர்.

TIRUCHIRAPALLI, MONDAY, MARCH 2, 2015

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

Regd. TRY/062/2015-2017 • RNI No. TNENG/2004/49966 • ISSN 0971 - 751X • Vol. 12 • No. 51 • CITY EDITION • 20 Pages • Rs. 5.00 • www.thehindu.in

CAMPUS CONNECT

MKU wins trophy

Madurai Kamaraj University won the overall trophy in the State-level inter-collegiate meet, organised by the post graduate and research department of Mathematics of Jamal Mohamed College. Around 270 students from various colleges participated in it. Events such as 'Dumb-c,' 'Math Rangoli,' 'Math Wonder,' 'Guess Me,' 'Master Mind,' and math quiz were conducted. A.K. Khaja Nazeemudeen, secretary and correspondent, Jamal Mohamed College, gave away the prizes in the presence of S. Mohamed Salique, Principal, G. Ramachandran, former head, Department of Mathematics, A. Mohamed Ibraheem, Vice-Principal, and S. Ismail Mohideen, Head, Department of Mathematics.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின்

லியோ கிளப் சார்பில் உருவான சங்கமம் இதழின் 30 வது பதிப்பு

'மக்கள் குரல்' ஆசிரியர் முத்துக்குமார் வெளியிட்டு வாழ்த்து

திருச்சி, மார்ச் 1–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் லியோ கிளப் சார்பில் உருவாக்கப்பட்ட சங்கமம் இதழின் 30 வது பதிப்பை, 'மக்கள் குரல்' ஆசிரியர் முத்துக்குமார் வெளியிட்டதுடன், அதனை உருவாக்கிய ஆசிரியர் குழுவுக்கு சான்றிழ்களையும் வழங்கி வாழ்த்தினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் லியோ கிளப் சார்பில், மாணவர்கள் ஒருங்கிணைப்புடன் உருவாக்கப்பட்ட சங்கமம் இதழின் 30 வது பதிப்பு வெளியீட்டு விழா, காஜாமைன் விடுதி அரங்கத்தில் நடத்தப்பட்டது. இந்த விழாவுக்கு கல்லூரி முதல்வர் முகமது சாலிக் தலைமை தாங்கினார். விழாவில், கல்லூரியின் தலைவர் ஜமால் முகமது பிலால், கல்லூரியின் செயலாளரும், தாளாளருமான காஜா நசிமுதீன், பொருளாளர் கலீல் அகமது, துணைச் செயலாளர் ஜமால் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சங்கமத்தின் 30 வது பதிப்பு

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட 'மக்கள் குரல்', 'டிரினிட்டி மிரர்' நாளிதழ்களின் ஆசிரியர் ஆர். முத்துக்குமார், லியோ கிளப்பின் முத்துவிழா இதழாக, மாணவர்களின் சுவடுகளை பதிப்பித்து கூட்டு முயற்சியாக வெளிவரும், சங்கமத்தின் 30 வது பதிப்பை வெளியிட்டு வாழ்த்திப் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:–

உண்மையில் சங்கமம் இதழ் பிரமிப்பை ஏற்படுத்தும் அளவுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் வெளியிடப்பட்டிருக்கும் மாணவர்களின் பதிவுகள் ஒவ்வொன்றும், ரசிக்க மட்டுமல்லாமல், சிந்தனையை தூண்டுவதாகவும் இருப்பது உண்மையில் சிறப்பான ஒன்று. இதனை இலவச இதழாக மட்டுமல்லாமல், அடுத்த ஆண்டு முதல் பொதுமக்களும் வாங்கிப் படித்து பாதுகாக்கும் விதமாக, விலைக்கு கொண்டுவர வேண்டும். அந்த அளவுக்கு இதன் உள்ளடக்கம் சிறப்பாக உள்ளது.

மாணவர்களின் சமூக அக்கறை

இந்த இதழில் வெளியாகி இருக்கும், "பறவை மரக்கிளையில் அமரும் போது, முறிந்து விடும் என்று அஞ்சுவதில்லை... ஏனெனில், அது நம்புவது மரக்கிளைகளை அல்ல! தன்னுடைய சிறகுகளை" என்ற தன்னம்பிக்கை கவிதை மற்றும் "பிரிந்து விட்டால் உயிரை விடுவேன்– இது காதல், ஆனால்... உயிரை விட்டால் பிரிந்து விடுவேன்– இது நட்பு" என்ற நட்பை போற்றும் கவிதை, இரத்த வகை, அறிவியல் செய்திகள் போன்ற பலவற்றையும் வியந்து பாராட்டினார்.

மேலும், ஜமால் முகமது கல்லூரி மாணவர்கள் இந்த 2015 ஆண்டு மட்டும் 1141 யூனிட் இரத்தம் வழங்கி இருப்பது கண்டு வியப்பாக இருக்கிறது. இவ்வளவு மாணவர்கள் இரத்த தானம் கொடுத்தது அறிந்து மகிழ்கிறேன். உண்மையில் இந்த வயதிலேயே சமூக அக்கறையுடன் இது போன்ற செயல்களில் ஈடுபடுவது பாராட்டத்தக்கது. அதேவேளை, நீங்கள் மட்டுமே இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதை விட, மற்றவர்களையும் இது போன்ற அறச்செயல்களில் ஈடுபடுத்துவது பயனுள்ளதாக இருக்கும். அதற்கு பொதுமக்களிடமும் இத்தகைய மனநிலையை உருவாக்க மாணவர்கள் முன்வர வேண்டும் என்று கூறினார்.

ஆசிரியர் குழுவுக்கு பாராட்டு

மேலும் இந்த விழாவில், சங்கமம் இதழை மிகச்சிறப்பாக வெளிக்கொண்டு வரப் பாடுபட்ட, முகமது சுபான், முகமது பெஹாத், முகமது யாசர் அராபத், முகமது அஸ்லம், அப்துல் ரஹ்மான் ஆகியோருக்கு சான்றிழ்களை வழங்கிய மக்கள் குரல் ஆசிரியர் முத்துக்குமார், பத்திரிகை துறையில் இருப்பதால், இந்த இதழ் எவ்வளவு சிறப்பாக வடிவமைக்கப் பட்டிருக்கிறது என்பதும், அதற்காக நீங்கள் எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டிருப்பீர்கள் என்பதும், என்னால் புரிந்து கொள்ள முடிகிறது என்று பாராட்டினார்.

இந்த விழாவில், திருச்சிராப்பள்ளி மைய நகர லயன்ஸ் கிளப் தலைவர் ஏ.இ.ராஜா வாழத்துரை வழங்கினார். மேலும், லியோ கிளப்பின் மாவட்ட தலைவர் பர்குணன், மாவட்ட ஆளுனர் லயன் கே. பிரேம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

The 30th edition of Sangamam, the official magazine of Leo Club of Jamal Mohamed College was released by Makkal Kural and Trinity Mirror Editor R Muthu Kumar. Dr. S. Mohamed Salique, Principal presided over the function. MJ Jamal Mohamed Bilal, president, Dr. A.K. Khaja Nazeemudeen Sahib, Secretary & Correspondent, KA Khaleel Ahamed Treasurer, Jamal Mohamed Assistant Secretary, Leo Clubs district chairperson Pargunan, District governor K Prem LIons Club Tiruchi Mid Town president AE Raja participated and offered their felicitations.Muthu Kumar also presented merit certificates to the editorial team Md Subhan, Md Fehath, Md Yasar Arafath, M Md Aslam, S Abdul Rahman who had done good job in bringing out the issue.

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் பட்டமளிப்பு விழா: நீதிபதி உத்திராபதி பங்கேற்பு

திருச்சி, பிப்.7–

ஜமால் முகம்மது கல்லூரியின் அரசு உதவிப் படிப்புக்களுக்கான பட்டமளிப்பு விழா என். பி. அப்துல் கபூர் குளிர்மை கலையரங்கில் நடைப்பெற்றது.

திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட நீதிபதி கே. உத்திராபதி, சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்தி, 720 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கினார். இளநிலையில் 433 பட்டங்களும், முதுநிலையில் 277 பட்டங்களும், 10 ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) பட்டங்களும் வழங்கப்பட்டன. பாரதிதாசன் பல்கலைக் கழக ஒருங்கிணைந்த தகுதித் தேர்வில் இளநிலை பட்டப் பிரிவில் 4 மாணவர்களும், முதுநிலைப் பட்டப் பிரிவில் 15 மாணவர்களும் சிறப்பு தகுதி (ரேங்க்) பெற்றமைக்காக கல்லூரி நிர்வாகத்தினரால் கவுரவிக்கப்பட்டனர்.

கே. சிஜோ (பி. ஏ.பொருளியல்) பல்கலைக் கழகத்தில் ஒன்பதாவது இடமும் (ரேங்க்), வி.விக்னேஸ் (பி.ஏ.வரலாறு) இருபதாவது இடமும், கே.சரவணன் (எம்.ஏ.வரலாறு) இரண்டாம் இடமும், எம். குமரன் (எம்.ஏ.ஆங்கிலம்) இரண்டாம் இடமும், என். மணிவர்மா (எம்.ஏ.பொருளியல்) மூன்றாம் இடமும், டி.பிராபாகரன் (எம்.ஏ.தமிழ்) மூன்றாம் இடமும், கே,முகம்மது ஹஸீப் (எம்.எஸ்.சி.வேதியியல்) நான்காம் இடமும், எஸ்.சேக் முகம்மது (எம்.எஸ்.சி.தாவரவியல்) ஐந்தாவது இடமும், எஃப்.முகம்மது ஹமிதீர், (எம்.பி.ஏ) ஏழாவது இடமும், எ.தினேஷ் குமார் (எம்.எஸ்.சி.விலங்கியல்) பதினான்காவது இடமும், என். சையது இப்ராஹிம் (எம்.எஸ்.சி.இயற்பியல்) பல்கலைக் கழகத்தில் பதினெட்டாவது இடமும் பெற்றனர்.

முன்னதாக கல்லூரி முதல்வர் எஸ். முகம்மது சாலிஹ், வரவேற்புரை நிகழ்த்தினார்.

கல்லூரி நிர்வாக குழுவின் செயலர் மற்றும் தாளாளர் எ.கே. காஜா நஜீமுதீன் பட்டமளிப்பு விழாவை தொடங்கி வைத்தார். நிர்வாக குழுவின் பொருளாளர். கே.ஏ. கலில் அகமது, உதவி செயலர். எம். ஜே. ஜமால் முகம்மது, பல்வேறு துறைகளின் தலைவர்களும், பேராசிரியர்களும், விருந்தினர்களும் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

MAGNUM LIGHTS
Pioneer in LED
The Magnum LED Lights
No 16, Samnath Plazza,
Madurai Main Road,
Melapudur, Trichy – 620 001,
Tamilnadu, India.
Ph: 0431, – 4011855
Mob: +91 9842414153.

காவேரி டைம்ஸ்
CAUVERY TIMES
Bilingual Neighbourhood Weekly Free Newspaper
RNI No. TNBIL / 2007 / 23710
Volume : 8 Issue : 376 Trichy - FEB 13 - 19, 2015 Friday

MAGNUM LIGHTS
Pioneer in LED
The Magnum LED Lights
No 16, Samnath Plazza,
Madurai Main Road,
Melapudur, Trichy – 620 001,
Tamilnadu, India.
Ph: 0431 – 4011855
Mob: +91 9842414153.

ஜமால் முகமது கல்லூரி பட்டமளிப்பு விழா

திருச்சி ஜமால் முகமது கல்லூரி 3 நாள் பட்டமளிப்பு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. அரசு உதவிபெறும் பட்டப்படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழா கடந்த 6-ந் தேதி நடைபெற்றது. இதில் திருச்சி மாவட்ட முதன்மை நீதிபதி கே.உத்திரபதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா உரை யாற்றி 689 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி பாராட்டினார். கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.முகமதுசாலிகு வரவேற் றார்.

ஜமால் முகமது கல்லூரி சுயநிதிப்பிரிவு (ஆண்கள்) பட்டமளிப்பு விழா கடந்த 7-ந் தேதி நடைபெற்றது. கல்லூரி நிர்வாக குழு செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜாநஜீமுதீன் பட்டமளிப்பு விழா பேருரையாற்றினார். கல்லூரி நிர்வாக குழு பொருளாளர் ஹாஜி கே.ஏ.கலீல்அகமது 1,012 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி சிறப்பித்தார்.

ஜமால் முகமது கல்லூரி சுயநிதிப்பிரிவு (பெண்கள்) பட்டமளிப்பு விழா கடந்த 18-ந் தேதி நடைபெற்றது. திருச்சி மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் டாக்டர் கே.கலா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விழா பேருரையாற்றி, 1,047 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி பாராட்டினார். அவர் பேசும்போது, கல்வியே சக்தி வாய்ந்த ஆயுதம் என்றும், நமது மனது எப்போதும் கட்டுப்பாட்டில் இருந்தால் சிகரங்களை அடைவது சுலப மாகும் என்றார். மேற்கண்ட விழாக்களில் நிர்வாக குழுத்தலைவர் ஜனாப் ஜமால் முகமது பிலால், கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே.காஜாநஜீமுதீன், கல்லூரி பொருளாளர் ஹாஜி கே.ஏ.கலீல்அகமது, கல் லூரி முதல்வர் முனைவர் எஸ்.முகமதுசாலிகு, உதவி செயலர் ஹாஜி ஜனாப் எம்.ஜே.ஜமால் முகமது, துணை முதல்வர் ஏ.முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் ஹாஜி எஸ்.இஸ்மாயில் முகைதீன், கல்லூரி சுயநிதி பிரிவு துணை முதல்வர் ஹாஜி எம்.ஷேக் முகமது, ஜமால் மேலாண்மைத் துறை இயக்குனர் ஜனாப் முனைவர் கே.அப்துஸ் ஸமது உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Cable : MONOPOLY POST BOX No. 3748
MAJESTIC MOTORS
No. 117, General Patters Road, Chennai - 600 002.
Ph : 044 - 2860 0937
2860 0938

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்
மணிச்சுடர்
MANICHUDAR TAMIL DAILY
நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper
RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2013-2015
TN /PMG(CCR) WPP258/2013-15

ST COURIER
The people's choice
DOMESTIC & INTERNATIONAL
"உலகம் உங்கள் கைக்குள்"
CALL : 044 - 22666666
www.stcourier.com
ST COURIER REACHES WHERE EVEN OTHERS DONT

மணி - 28 சுடர் - 239 | ஹிஜ்ரி 1436 ரபியுல் ஆஹிர் - 22 | திருவள்ளுவர் ஆண்டு - 2046 தை - 29 | சென்னை 12.02.2015 வியாழன் | வெளியூர் 13.02.2015 வெள்ளி | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் - 4 | விலை ₹ 3

ஜமால் முஹம்மது கல்லூரி பட்டமளிப்பு விழாக்கள்

திருச்சி, பிப் 12

ஜமால் முஹம்மது கல்லூரியில் சுயநிதி படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழா என்.பி. அப்துல் கபூர் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் முனைவர் ஏ.கே. காஜா நஜுமுதீன் பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்தினார். பொருளாளர் கே.ஏ. கலீல் அஹமது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 1150 மாணவர்களுக்கு பட்டமளிப்பு வழங்கினார்.

அரசு உதவி படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழா

ஜமால் முஹம்மது கல்லூரி அரசு உதவி படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழா என்.பி. அப்துல் கபூர் கலையரங்கில் நடைபெற்றது. மாவட்ட முதன்மை நீதிபதி கே.உத்திராபதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 720 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். முஹம்மது சாலிஹ் வரவேற்புரை நிகழ்த்தினார். பொருளாளர் கே.ஏ. கலீல் அஹமது விழாவை தொடங்கி வைத்தார். நிர்வாக் குழுத் தலைவர் எம்.ஜே. ஜமால் முஹம்மது பிலால் சாஹிப், துணைச் செயலாளர் எம்.ஜே. ஜமால் முஹம்மது சாஹிப் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சுயநிதி மகளிர் பிரிவு பட்டமளிப்பு விழா

ஜமால் முஹம்மது கல்லூரி சுயநிதி மகளிர் பிரிவு பட்டமளிப்பு விழா என்.பி. அப்துல் கபூர் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குநர் முனைவர் க.கலா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 1172 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கினார். முதல்வர் முனைவர் சாலிஹ் வரவேற்புரை நிகழ்த்தினார். தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முதீன் விழாவை தொடங்கி வைத்தார்.

– தினத்தந்தி, ஒவ்வொரு அங்குலமும் தங்கநகை போல அலங்கரிக்கப்படுகிறது –

REGD. No. TRY/056/2015-2017 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

தினத் தந்தி
DAILY THANTHI

வெல்க தமிழ்

திருச்சி (12–2–2015) வியாழக்கிழமை | மலர் 73 இதழ் 103 | ஜய ஸ்ரீ தை மீ 29 உ ஹிஜ்ரி 1436 ரபிஉல் ஆகிர் 22

20 பக்கம் 500 காசு

No.1 TMT - KISCOL TMT
KISCOL
SYMBOL OF QUALITY
Mobile : 99655 44486
KANNAPPAN IRON & STEEL COMPANY PVT. LTD.

msp
•Vests •Briefs •Slips
MSP KNIT GARMENTS
Trade Enquiry : 95972 55500

ஜமால் முகமது கல்லூரி

சுயநிதி மகளிர் பிரிவு படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழா

திருச்சி, பிப்.12–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் சுயநிதி மகளிர் பிரிவு படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழா நடந்தது. விழாவில் திருச்சி மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் கலா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 1172 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி பேசினார். இளநிலையில் 817 பட்டங்களும், முதுநிலையில் 290 பட்டங்களும், 65 ஆய்வியல் நிறைஞர்(எம்.பில்) பட்டங்களும் வழங்கப்பட்டன. பாரதிதாசன் பல்கலைக்கழக ஒருங்கிணைந்த தகுதி தேர்வில் இளநிலை பட்ட பிரிவில் 2 மாணவிகளும், முதுநிலை பட்ட பிரிவில் 6 மாணவிகளும் சிறப்பு தகுதி பெற்றமைக்காக கல்லூரி நிர்வாகத்தினரால் கவுரவிக்கப்பட்டனர். விழாவில் கல்லூரி நிர்வாக குழுவின் செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜிமுதீன் பட்டமளிப்பு விழாவை தொடங்கி வைத்தார். நிர்வாக குழுவின் ஜமால் முகம்மது பிலால், பொருளாளர் கலீல் அகமது, உதவி செயலாளர் ஜமால் முகமது உள்பட பல்வேறு துறைகளின் தலைவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கல்லூரி முதல்வர் முகமது சாலிஹ் வரவேற்று பேசினார்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
http://www.dinamani.com

தினமணி

சனிக்கிழமை
7 பிப்ரவரி, 2015
திருச்சி
12 பக்கங்கள் ரூ. 4

'வாழ்நாளில் பாதியை பிறருக்காக வாழுங்கள்'

திருச்சி, பிப். 6: படித்து பட்டம், பதவிகளை பெற்ற ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் மறு பாதியை பிறருக்காக வாழுங்கள் என்றார் திருச்சி மாவட்ட முதன்மை நீதிபதி கே. உத்திராபதி.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 720 பேருக்கு பட்டங்களை வழங்கி அவர் மேலும் பேசியது:

குடும்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் இளைஞர்கள் பெற்றோர் விருப்பத்துடன் நிச்சயிக்கப்பட்ட திருமணம் செய்வது தான் சிறந்தது. ஏனெனில் தினசரி 3 முதல் 5 வழக்குகள் காதல் திருமணம் தொடர்பான வழக்குகளாக உள்ளன. காதல் திருமணத்தை குறைகூறவில்லை. அதனால் ஏற்படும் விளைவுகளை நேரடியாக காணும் அனுபவத்தை இங்கே பகிர்ந்து கொள்கின்றேன். காதல் திருமணம் செய்யும் இளையோர் எதையும் எதிர்கொள்ளும் திறனிருந்தால் மட்டும் செய்வது நல்லது. எந்த தேவைக்கும் இளையோர் உங்களது பெற்றோரை காவல் நிலையங்கள், நீதிமன்றங்களுக்கு செல்லும் நிலையை ஏற்படுத்தாதீர். நீதித்துறையில் இருந்துகொண்டு அதனைக் குறைகூறவில்லை. நடப்பை கூறுகின்றேன். பிரச்னையுள்ளவர்களும், அவற்றை தீர்க்க முடியாதவர்களும்தான் இவற்றுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இங்கே பட்டம் பெற்றுச்செல்வோர் தங்களது வாழ்நாளை இரண்டாகப் பிரித்து முதல் பாதிக்குள் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும். மறுபாதியை பிறருக்காக வாழ வேண்டும் என்றார்.

பட்டம் பெற்றவர்களில் இளங்கலையில் 14 பேர், முதுகலையில் 15 பேர் பல்கலைக்கழக அளவில் இரண்டாம் இடத்தைப் பெற்றனர். அவர்களுக்கு பரிசுகளும், பதக்கங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாகக் குழுச் செயலர் ஏ.கே. காஜாநஜிமுதீன், பொருளாளர் கே.ஏ. கலீல் அகமது சாகிப், உதவி செயலர் எம்.ஜே. ஜமால் முகமது சாகிப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

திருச்சி 8-2-2015 (ஞாயிற்றுக்கிழமை) 10 பக்கம் 400 காசு ★★★ மலர் 38 இதழ் 55

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில்

சுயநிதிப்பிரிவுப் படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழா

1150 மாணவர்கள் பட்டம் பெற்றனர்

திருச்சி, பிப்.8–

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியின் சுயநிதிப் பிரிவுப் படிப்புக்களுக்கான பட்டமளிப்பு விழா என்.பி.அல்துல் கபூர் குளிர்மை கலையரங்கில் நடைபெற்றது.

ஜமால் முகம்மது கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜீமுதீன் பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்தினார். ஜமால் முகம்மது கல்லூரியின் பொருளாளர் கே.ஏ. கலில் அகமது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 1150 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கினார்.

இளநிலையில் 765 பட்டங்களும், முதுநிலையில் 319 பட்டங்களும், 66 ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) பட்டங்களும் வழங்கப்பட்டன. பாரதிதாசன் பல்கலைக்கழக ஒருங்கிணைந்த தகுதித் தேர்வில் இளநிலை பட்டப்பிரிவில் 4 மாணவர்களும், முதுநிலைப் பட்டப்பிரிவில் 15 மாணவர்களும் சிறப்பு தகுதி பெற்றமைக்காக கல்லூரி நிர்வாகத்தினரால் கவுரவிக்கப்பட்டனர்.

கே.சிஜோ (பி.ஏ.பொருளியல்) பல்கலைக்கழகத்தில் ஒன்பதாவது இடமும், வி.விக்னேஸ் (பி.ஏ வரலாறு) இருபதாவது இடமும், கே.சரவணன் (எம்.ஏ.வரலாறு) இரண்டாம் இடமும், எம்.குமரன் (எம்.ஏ. ஆங்கிலம்) இரண்டாம் இடமம், என்.மணிவர்மா (எம்.ஏ. பொருளியல்) மூன்றாம் இடமும், டி.பிரபாகரன் (எம்.ஏ.தமிழ்) மூன்றாம் இடம், கே.முகம்மது ஹஸீப் (எம்.எஸ்.சி.வேதியியல்) நான்காம் இடமும், எஸ்.சேக் முகம்மது (எம்.எஸ்.சி.தாவரவியல்) ஐந்தாவது இடமும், எஃப் முகம்மது ஹமித்ர் (எம்.பி.ஏ) ஏழாவது இடமும் எ.தினேஷ் குமார் (எம்.எஸ்.சி.விலங்கியல்) பதினான்காவது இடமும், என்.சையது இப்ராஹிம் (எம்.எஸ்.சி. இயற்பியல்) பல்கலைக்கழகத்தில் பதினெட்டாவது இடமும் பெற்றனர்.

முன்னதாக கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.முகம்மது சாலிஸ் வரவேற்றார். கல்லூரி நிர்வாக குழுவின் பொருளாளர் கே.ஏ.கலில் அகமது பட்டமளிப்பு விழாவை தொடங்கி வைத்தார். நிர்வாக

விழாவில் மாணவர்களுக்கு கல்லூரி பொருளாளர் கே.ஏ. கலில் அகமது பட்டம் வழங்கிய போது எடுத்த படம்.

திருச்சியில்
மர, ஸ்டீல் பர்னிச்சர்கள்
வாங்க கைராசியான ஸ்தாபனம்
ராயல் பர்னிச்சர்
22, மதுரை ரோடு, திருச்சி – 8.
போன் : 2702225, 2700620.

-TPTC Edition-

தினமலர்

நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்

◆ திருச்சி ◆ திங்கள் ◆ பிப்ரவரி 9 2015 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | ◆ 16 பக்கம் 500 காசு ◆ மலர் 64 ◆ இதழ் 156

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் சுய நிதி மகளிர் பிரிவு படிப்புக்களுக்கான பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் கலா பட்டம் வழங்குகிறார். அருகில் கல்லூரி செயலாளர் காஜா நஜுமுதீன், முதல்வர் முகமது சாலிக் மற்றும் பலர்.

'கல்வியே சக்தி வாய்ந்த ஆயுதம்'

திருச்சி, பிப். 9-

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் சுய நிதி மகளிர் பிரிவு படிப்புக்களுக்கான பட்டமளிப்பு விழா நடந்தது.

விழாவை கல்லூரி செயலாளர் காஜா நஜுமுதீன் தொடங்கி வைத்தார்.

மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் கலா பட்டம் வழங்கி பேசுகையில், பெண்களை அடிமையாக நடத்தும் நாடு உயர்ந்ததில்லை. கல்வியினால்தான் பெண்கள் முன்னேற முடியும். கல்வியே சக்தி வாய்ந்த ஆயுதமாகும்.

சவால்களை சந்திக்க, சமாளிக்க இளைய தலைமுறை புத்தெழுச்சி பெற வேண்டும். கலாச்சார சீர்கேடுகளிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும். அன்பும் அறிவும் ஆற்றல் மிக்க கருவிகளாகும். லட்சிய வேட்கை, அறிவுத்தேடல், கடும் உழைப்பு செயலுாக்க கனவு ஆகியவை வெற்றியின் நான்கு வழிகளாகும். நேர்மறை சொற்கள் மனதுக்கு உரமூட்டும்.

மனது எப்போதும் கட்டுப்பாட்டில் இருந்தால் சிகரங்களை அடைவது சுலபமாகும் என்றார்.

விழாவில் இளநிலையில் 817, முதுநிலையில் 290, 65 ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) என மொத்தம் ஆயிரத்து 172 மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற 2 மாணவிகளும், முதுநிலை பட்டப்பிரிவில் 6 மாணவிகளுக்கும் பரிசு வழங்கப் பட்டது. நிகழ்ச்சியில் நிர்வாகக் குழு பொருளாளர் கலில் அகமது , உதவி செயலாளர் ஜமால் முகமது, பேராசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கல்லூரி முதல்வர் முகமது சாலிக் வரவேற்றார்.

முரசு: 54 ஒலி: 266
10 பக்கங்கள் விலை 500 காசுகள்
THANJAI MALAI MURASU
Reg.No.TRY/060/2015-2017
RNI Regn. No.5842/61
தஞ்சை
மாலை முரசு
திருச்சி பதிப்பு
09-02-2015 (தை 26) திங்கட்கிழமை
★★★

திருச்சி

ஜமால்முகமது கல்லூரியில் பட்டமளிப்பு விழா

திருச்சி, பிப். 9-

திருச்சி ஜமால்முகமது கல்லூரியின் சுயநிதி மகளிர் பிரிவு படிப்புகளுக்கான பட்டமளிப்பு விழா என். பி. அப்துல் கபூர் குளிர்மை கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது. மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் க. கலா, சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்தி, 1172 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கிபேசினார். அப்போது

கல்வியினால் பெண்கள் முன்னேற முடியும், கல்வியே சக்தி வாய்ந்த ஆயுதமாகும் என்றார் வள்ளுவர். கலாச்சார சீர்கேடுகளிலிருந்து இளைய தலைமுறை தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும். உங்கள் மனது எப்போதும் உங்கள் கட்டுப்பாட்டில் இருந்தால் சிகரங்களை நீங்கள் அடைவது சுலபமாகும் என்றார்.

நிகழ்ச்சியில் இளநிலையில் 817 பட்டங்களும், முதுநிலையில் 290 பட்டங்களும், 65 ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) பட்டங்களும் வழங்கப்பட்டன. பாரதிதாசன் பல்கலைக்கழக ஒருங்கிணைந்த தகுதித் தேர்வில் இளநிலை பட்டப் பிரிவில் 2 மாணவிகளும், முதுநிலைப் பட்டப் பிரிவில் 6 மாணவிகளும் சிறப்பு தகுதி (ரேங்க்) பெற்றமைக்காக கல்லூரி நிர்வாகத்தினரால் கவுரவிக்கப்பட்டனர். ஏ. நூருல் அர்ஷியா (பி.ஏ. ஆங்கிலம்) பல்கலைக் கழகத்தில் மூன்றாம் இடமும் (ரேங்க்), எம்.என். ரூபினா பானு (பி.பி.ஏ) பதினெட்டாம் இடமும், ஐ. ஆலியா ரிஷ்வானா (எம்.எஸ்.சி மைக்ரோ பயோலஜி) மற்றும் எம்.ஜி. ரைஹானா பேகம் (எம்.காம்) ஐந்தாம் இடமும், ஜே. அனு (எம்.எஸ்.சி கணிதவியல்) எட்டாம் இடமும், கே.நூருல் ரூபியா (எம்.எஸ்.சி. பயோடெக்னாலஜி) பன்னிரெண்டாம் இடமும், எஸ். சர்மிளா பானு (எம்.எஸ்.டபிள்யூ) பதிமூன்றாம் இடமும், ஏ. அன்சர் நிஷா (எம்.எஸ்.சி. ஐடி) பல்கலைக் கழகத்தில் பதினெட்டாம் இடமும் பெற்றனர்.

முன்னதாக கல்லூரி முதல்வர் எஸ். முகம்மது சாலிஹ் வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரி நிர்வாக குழுவின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர். எ.கே. காஜா நஜீமுதீன் பட்டமளிப்பு விழாவை தொடங்கி வைத்தார். நிர்வாக குழுவின் எம். ஜே. ஜமால் முகம்மது பிலால் சாஹிப், பொருளாளர். கே.ஏ. கலில் அகமது, உதவி செயலர். எம்.ஜே. ஜமால் முகம்மது மற்றும் பல்வேறு துறைகளின் தலைவர்களும், பேராசிரியர்களும், விருந்தினர்களும் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ் முரசு

சனி 27 9 2014 | வாழ்வும் வளமும் | 11

மருத்துவக் கருத்தரங்கு

ஜமால் முகம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை நீரிழிவு நோய் பற்றிய இலவச மருத்துவக் கருத்தரங்கு ஒன்றை பீட்டி சாலையிலுள்ள சிண்டா கலையரங்கத்தில் நடத்தவிருக்கிறது.

டான் டோக் செங் மருத்துவமனையில் பணியாற்றி வரும் நீரிழிவு நோய் மருத்துவ நிபுணர் டாக்டர் அப்துல் ஷக்கூர், இந்தக் கருத்தரங்கை தமிழ்மொழியில் நடத்தவிருக்கிறார். தமிழில் கேள்விப்பதில் அங்கமும் இடம்பெறும். சிறப்பு விருந்தினராக சிண்டாவின் தலைமை அதிகாரி திரு பரதன் கலந்துகொள்கிறார். தொடர்புக்கு 63981020.

பெரும்புலவர்-பேராசிரியர்
சி.நயினார் முஹம்மது நினைவுக் கூட்டம்

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் முதல்வர், பெரும் புலவர், முனைவர் சி. நயினார் முஹம்மது கடந்த 23-7-2014 அன்று அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில், 85 வயதில் காலமானார். அவருடைய கல்விப் பணியையும், தமிழ்ப் பணியையும், சமூக நற்சேவைகளையும் நினைவு கூரும் கூட்டம் சிங்கப்பூரில் நடைபெற்றது. திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க சிங்கப்பூர் கிளையின் ஏற்பாட்டில், பென்கூலன் பள்ளிவாசல் பன்னோக்கு அரங்கத்தில் 3-8-2014அன்று மாலை 4 மணியளவில் கூட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் ஆடிட்டர் ஹாஜி முஹிய்யத்தீன் அப்துல் காதர் தலைமை வகித்தார். சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஜனாப் பரீஜ் முஹம்மது கிராஅத் ஓதி கூட்டத்தைத் துவங்கி வைத்தார். பெரும் புலவர் மர்ஹூம் சி. நயினார் முஹம்மது அவர்களைப் பற்றிய முக்கிய குறிப்புகளை, சங்கத்தின் துணைத் தலைவர் கலந்தர் மொஹிதீன் எடுத்துரைத்தார்.

மூத்த எழுத்தாளர் ஜே.எம்.சாலி, பன்னூல் ஆசிரியர் டாக்டர் ஹிமானா சையத், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் பொதுச்செயலாளர் ஹாஜி மு.அ.மசூது, விரிவுரையாளர் அப்துல் கரீம், எழுத்தாளர் ஷாநவாஸ் அப்துல் காதர், கணிதப் பேராசிரியர் அமானுல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டு பெரும்புலவர் ஆற்றிய பணிகளை நினைவுகூர்ந்தனர். பென்கூலன் பள்ளிவாசலின் இமாம், உஸ்தாத் ஹாஜி அப்துல் கையூம் பாகவி அவர்கள் சிறப்பு துஆ ஓதினார். சமூகப் பிரமுகர்களும், கல்லூரியின் முன்னாள் மாணவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் 32 ஆண்டுகள் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும், பின்னர் 4 ஆண்டுகள் அக்கல்லூரியின் முதல்வராகவும் அரும்பணியாற்றியவர், பின்னர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்

கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். குன்றக்குடி அடிகளார் இவருக்கு "பெரும் புலவர்" பட்டம் வழங்கி பெருமிதப்படுத்தினார். திருக்குர்ஆனுடன் திருக்குறள் எப்படி ஒத்துப் போகிறது என ஆய்வுக் கட்டுரை எழுதி மதச்சார்பின்மைக்கு வித்திட்டவர். "குறள் ஞாயிறு" என்ற விருது பெற்ற பெருமகன் இவர்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதனுடன் இணைந்து "தமிழகப் புலவர்" குழுவை உருவாக்கி, அதன் செயலாளராக 28 ஆண்டுகள் பணியாற்றியவர். மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் "தமிழ்ச் செம்மல்" என்ற பட்டம் வழங்கி இவரைக் கவுரவித்தது.

"இஸ்லாமிய இலக்கியக் கழகம்" எனும் அமைப்பை தோற்றுவித்து, ஐந்து அனைத்துலக இலக்கிய மாநாடுகளை நடத்தி, அதன் மூலம் இஸ்லாமிய இலக்கியத்தை மக்களிடையே கொண்டு சேர்த்த பெருமகன் இவர். திருச்சி தமிழ்ச் சங்கத்தின் துணை அமைச்சராக இறக்கும் வரை இருந்தவர். உலகத் திருக்குறள் பேரவை இவருக்கு "திருக்குறள் நெறி தொண்டர்" என்ற விருது வழங்கி சிறப்பித்தது. பல அரிய நூல்களை எழுதி, தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சமூகத்திற்கும் பெரும் பங்களிப்பை வழங்கிய பெருமைக்குரியவர் பேராசிரியர் சி. நயினார் முஹம்மது. அவருக்கு மனைவி, மகள், நான்கு மகன்கள் உள்ளனர். பிள்ளைகள் அனைவரும் பொறியியல் நிபுணர்கள்.

-TPTC Edition-

தினமலர்

நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்

JAMAL MOHAMED COLLEGE (A)
20 AUG 2014
GENERAL LIBRARY, TRICHY

◆ திருச்சி ◆ புதன் ◆ ஆகஸ்ட் 20 2014

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

◆18 பக்கம் 500 காசு ◆ மலர் 63 ◆ இதழ் 348

இயற்கையை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுங்கள்: மாணவர்களுக்கு அறிவுரை

திருச்சி, ஆக. 20-

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ரோட்ராக்ட் கிளப் சார்பில் எதிர்காலத்தை கவனத்தில் கொள்வோம் என்ற நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் காஜா நஜிமுதீன் தலைமை வகித்தார். முதல்வர் முகமது சாலிக் முன்னிலை வகித்தார். திருச்சி மண்டல பாஸ்போர்ட் அலுவலர் பாலமுருகன் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கிப் பேசுகையில், 'இயற்கை வளங்களை மேம்படுத்த நீர்நிலைகளை பாதுகாக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மரங்கள் நிறைந்திருப்பதால் தான் மலைகளில் ஆறுகள் உருவாகின்றன. எனவே ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலங்களில் மாணவர்கள் 2 மரக்கன்றுகள் நடும் வழக்கத்தைக் மேற்கொள்ள வேண்டும். தமிழகத்திலுள்ள மக்கள் அனைவரும் இவ்வாறு செய்யும்போது, 10 ஆண்டுகளில் 30கோடிக்கும் மேற்பட்ட மரங்கள் உருவாகியிருக்கும். இதற்கான முதல் முயற்சியாக கல்லூரிகளில் உள்ள ரோட்ராக்ட் கிளப் மாணவர்கள் இணைந்து நர்சரி கார்டன் அமைத்து மரக்கன்றுகள் வளர்க்கலாம். அந்த மரக்கன்றுகளைப் பிறருக்குப் பரிசாக வழங்குவது, தாங்கள் வசிக்கும் வீதியை சுத்தப்படுத்தி, அங்கு மரக்கன்றுகளை நடுவது உள்ளிட்ட நல்ல செயல்களை செய்யலாம். மாணவர்கள் தங்களுக்குள் ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு, தங்கள் பகுதியிலுள்ள குப்பைகளை அகற்றுவது, சுத்தப்படுத்துவது ஆகிய பணிகளை செய்யலாம். மரங்கள், விலங்குகள் என இயற்கையை போற்ற வேண்டும் என்று தான் பண்டைய கலாச்சாரத்திலேயே இரண்டையும் கடவுளாக வழிபடும் வழக்கம் இருந்துள்ளது. எனவே மாணவர்கள் இயற்கையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட வேண்டும் என்றார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில், மண்டல பாஸ்போர்ட் அலுவலர் பாலமுருகன் ரோட்ராக்ட் கிளப் உறுப்பினர்களுக்கு மரக்கன்று வழங்கினார். அருகில் கல்லூரி தாளாளர் காஜாநஜிமுதீன், முதல்வர் முகமது சாலிக், ரோட்டரி கிளப் தலைவர் சுரேஷ்குமார்.

திருச்சி ரோட்டரி கிளப் தலைவர் சுரேஷ்குமார், கல்லூரி ரோட்ராக்ட் கிளப் ஆலோசகர் முகமது இஸ்மாயில் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். நிகழ்ச்சியில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த ரோட்ராக்ட் கிளப் உறுப்பினர்களுக்கு 2 ஆயிரத்து 500 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட ரோட்ராக்ட் பிரதிநிதி ராமலிங்கம், தனித்திறன் செயல்பாட்டுத்துறை ஒருங்கிணைப்பாளர் ஜமால் முகமது ஜாபர் கலந்து கொண்டனர்.

தினகரன்

ஒரு புதிய அனுபவம் www.dinakaran.com 20 பக்கம் ₹5

போர் கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிப்பு பக்கம் 8

முற்றிலும் வண்ணமயமான வசந்தம் புத்தகம் இணைப்பு கேட்டு வாங்குங்கள்

தங்கம் விற்பனை அதிகரிக்கும் பக்கம் 14

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)
18 AUG 2014
GENERAL LIBRARY, TRICHY-20

● திருச்சி ● ஞாயிறு, ஆகஸ்ட் 17, 2014 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 36 ஒளி 72

எம்பிஏ மாணவர்களின் தேவை அதிகரிப்பு

ஜமால் மேலாண்மை துறையுடன் 2 நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

திருச்சி, ஆக.17: மேலாண்மை (எம்பிஏ) படிப்பு முடித்த இளைஞர்களின் தேவை அதிகரித்திருப்பதால் திருச்சி ஜமால் முகமது கல்லூரியுடன் 2 தனியார் நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஜமால் மேலாண்மை துறையை சேர்ந்த என்எம் காஜா மியான் ராவுத்தர் தொழில் நிறுவன கூட்டாண்மை மையம் சார்பில் ஜிபி பொறியியல் தனியார் நிறுவனம், சென்னை ஆறு நட்சத்திர தொழில்நுட்பங்கள் தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடுதல் நிகழ்ச்சி நடந்தது.

ஜமால் மேலாண்மை துறை இயக்குனர் அப்துல் சமது வரவேற்றார். கல்லூரி முதுல்வர் முகமது சாலிகு தலைமைவகித்தார். கல்லூரி பொருளாளர் கலீல் அஹமது சாஹிப், கல்லூரி துணை செயலாளர் ஜமால் முகமது சாஹிப் முன்னிலை வகித்தனர். கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் நஜீமுத்தீன் சாஹிப், 2 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஜிபி பொறியியல் தனியார் நிறுவன மேலாண்மை இயக்குனர் பட்டாபிராமன், ஆறு நட்சத்திர தொழில்நுட்பங்கள் நிறுவனம் இயக்குனர் நசீர் அஹமது ஆகியோரும் கையெழுத்திட்டனர்.

இதைதொடர்ந்து பட்டாபிராமன் பேசுகையில், தற்காலத்தில் வாணிபம், தொழில் வளர்ச்சி விரைவானதாகவும், சிக்கலானதாகவும், இடர்கள் நிறைந்ததாகவும் உள்ளது. வரிவிதிப்பு செயல்முறைகளும், உலகளவில் உள்ள வாணிப சட்டங்கள் சிக்கலானதாகவும் உள்ளன. இதனால் மேலாண்மை படிப்புக்கு தற்போது முக்கியத்துவம் தரப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியம், உலக வர்த்தக அமைப்புகளின் தாக்கத்தால் ஏற்றுமதி செய்வதில் பல்வேறு சிரமங்கள், விதிகள் கடுமையானதாக உள்ளதாலும், சீனா நாட்டில் உற்பத்தி செய்யும் பொருள்கள் குறைவான தரம் மற்றும் குறைவான விலையுடையதாக இருப்பதாலும், தெற்காசிய ஒத்துழைப்பு மண்டல நாடுகளின் (சார்க்) கூட்டமைப்பாலும் வாணிபத்துக்கு முக்கியத்துவம் அதிகரித்திருப்பதாலும், மேலாண்மை படிப்புக்கு முக்கியத்துவம் அதிகரித்துள்ளது என்றார்.

மேலாண்மை துறைத்தலைவர் காதர் மொஹிதீன் நன்றி கூறினார்.

ஜமால் முகமது கல்லூரியில் பட்டமளிப்பு விழா

திருச்சி, ஆக. 17: திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஆலிம் ஸனது பட்டமளிப்பு விழா நடந்தது. அரபித்துறை பேராசிரியர் சையது கயாஸ் அஹமது வரவேற்றார். கல்லூரி தாளாளர் காஜா நஜிமுதீன் தலைமை வகித்தார். முதல்வர் முகமது சாலிகு துவக்கி வைத்தார். சென்னை ஜமாலிய்யா அரபி கல்லூரி முதல்வர் மவுலாவி சையது நயாஜ் அஹ்மது ஜமாலி அரபி மொழியில் பட்டமளிப்பு பற்றி பேசினார். இக்ரா பிஸ்மிரப்பிக் அரபி மன்ற துவக்க விழா நடந்தது. சென்னை மந்தைவெளி ஈத்கா பள்ளி தலைமை இமாம் மவுலாவி இல்யாஸ் ரியாஜி பேசினார். ஒருங்கிணைப்பாளர் அப்துல் காதர் நன்றி கூறினார்.

பிரியா
குக்கர் கேஸ்கட் Rs.60/-
MARLEX, BUTTERFLY, PREMIER
போன்ற எல்லா கம்பெனி குக்கர்களுக்கும் கிடைக்கும்

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.3.00
மக்கள் குரல்
நடுநிலை நாளேடு
மதுரை பதிப்பு
(மலர்:36 ★ 18.8.2014 திங்கள் மாலை ★ வெளியீடு 19.8.2014 செவ்வாய் ★ இதழ் 83)
Regd. No. TN/SR-21/2014

T.NAGAR LKS
GOLDHOUSE PVT. LTD.
SINCE 1925
T.NAGAR Ph.: 2434 1111 / 5555 | ANNA NAGAR Ph.: 2620 4444 / 5555
"LKS - GOLD" IS CASH IN HAND

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி

திருச்சி, ஆக.18–

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. முன்னதாக கல்லூரி முதல்வர். முனைவர். எஸ். முகமது சாலிகு வரவேற்று தலைமையுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரி ஆட்சிமன்றக்குழுவின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜீமுத்தீன், தலைவர் ஹாஜி.எம்.ஜே. ஜமால் முகமது பிலால், பொருளாளர் ஹாஜி. கே.ஏ.கலீல் அகமது, உதவிச் செயலர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகமது, முன்னாள் தாளாளர் மற்றும் செயலர் எம்.ஜே.எம். அப்துல் கபுர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர் ஹாஜி. கே. என். எஸ். ஏ. ரஹ்மத்துல்லா ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

சிங்கப்பூரிலிருந்து ஹாஜா சேக் அலாவுதீன், நூர் முகமது அப்துல் மாலிக், அப்துல் கரீம் அப்துல் நாஜிர், ஹபீபுல்லா நூர் முகமது, குவைத்திலிருந்து என்.அமீர் அகமது, துபையிலிருந்து டி.எம்.ஏ. அப்துல் மாலிக், மலேசியாவிலிருந்து டாக்டர்.அமீனுல் உசைனி பின் அப்துல் காதர், கத்தாரிலிருந்து முகமது சித்திக், ஹபீப் ரஹ்மான் எம்.ஐ. ஷர்புதீன், ஹாஜா மொய்தீன், ஷார்ஜாவிலிருந்து ஏ.முகமது ஷாஜகான், கலிபோர்னியாவிலிருந்து அய்மான் ஆரிஷா ஆகியோரும் ஜமால் முகம்மது கல்லூரியின் சிறந்த முன்னாள் மாணவர் விருதினைப் பெற்றார்கள்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி முன்னாள் தலைவர் பி.சாமி அய்யா, பட்டய கணக்காளர் ஜி.ரமேஷ்குமார், ஜமால் முகமது கல்லூரி ஆயிஷா பெண்கள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் முதல்வர் கே.எம்.கபீர் ரூஷா, செயற்கை கற்கள் உற்பத்தியாளர் சங்கங்களின் துணைத்தலைவர் டி.அசோக் காந்தி, எஸ். கோபால், ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர்.ஏ.எம். முகமது சிந்தாஷா, பாரதிதாசன் பல்கலைக்கழக பயோ மெடிக்கல் சைன்ஸ் துறையில் இணைப்பேராசிரியர் கே. சத்தியமூர்த்தி, சென்னை அகாடமி இயக்குநர் என். அல்தாப் அகமது, பொறியியல் ஆலோசகர் எம்.எஸ்.ஹபீபுர் ரஹ்மான், பேராசிரியர் முனைவர். ஏ. முகமது ஜாபர், ஏ.நஜீர் அகமது, ஷீரின் சம்சுதீன், மதுரை காமராஜர் பல்கலைக்கழக மைக்ரோ பயோலஜி துறைத் தலைவர் முனைவர். எம்.ஹுசைன் முனவ்வர், நாகூர் அரசு டவுண் காஜி அல்ஹாஜ் எஸ்.ஏ.சேக் ஹுசைன் சாகிப் காதிரி, விழுப்புரம் ரேடியன்ட் ஐ.ஏ.எஸ் அகாடமி இயக்குநர் ஆர். ரஹ்மத்துல்லா, கடலூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஏ.அருண்மொழித்தேவன் முதலியோர் ஜமால் முகம்மது கல்லூரியின் சிறந்த முன்னாள் மாணவர் விருதினைப் பெற்றுக்கொண்டு ஏற்புரை நிகழ்த்தினர்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக, சமீபத்தில் மறைந்த கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினர் ஹாஜி ஏ.வி. எம். ஜாபர்தீனுக்கும், கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் பெரும்புலவர். முனைவர்.சி. நயினார் முகமது, முன்னாள் மாணவர் புரவலர் எம். கோவிந்தசாமி, மலேசிய தமிழ் கவிஞரும் தஞ்சை தமிழ் பல்கலைக்கழக விருது பெற்றவருமான சீனி நைனார் முகமது, கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஈ.பி. முகமது இஸ்மாயில் அவர்களின் மனைவி நூர்ஜஹான் இரங்கல் தொிவித்து ஆன்ம சாந்திக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.ன் துணைமுதல்வர். முகமது இப்ராகீம் நன்றியுரை நிகழ்த்தினார்.

T.NAGAR LKS GOLDHOUSE PVT. LTD.
SINCE 1935
"LKS - GOLD" IS CASH IN HAND

TRINITY MIRROR
Madurai MONDAY 18-8-2014
VOL. 20 No. 40 PAGES 8 Rs. 3.00
◆ NATIONAL DAILY FOR THE PEOPLE ◆
Regd.No.TN/MA/175/14
Air Surcharge 40 Paise

PRIYA
Cooker gasket Rs.60/-
MARLEX, BUTTERFLY, PREMIER
Available for all cookers

Jamal Md College 'Distinguished Alumnus Award' presented

Jamal Mohamed College Alumni Association blossomed in 1963. After its humble beginning, it has a good geographical spread of JMC Alumni Chapters both in abroad and India namely Jeddah (Saudi Arabia), Dubai, Kuwait, Malaysia, Singapore, Bahrein, Calicut (Kozhikodu), Bengaluru and Chennai.

The Alumni Association meeting was held the occasion of this meeting, the following former students honoured with **"Distinguished Alumnus Award"**. Nearly 500 former students and parents participated. The four former students were from Singapore Chapter, two from Kuwait, one from Dubai, one from Malaysia, three from Qatar, one from Sharjah, one from California and seventeen from various parts of Tamilnadu – namely Trichy, Chennai, Villuppuram, Madurai, Cuddalore and Nagore.

The Distinguished Alumnus Awards winners for the year 2014-15 are: N. Altaf Ahamed, Director, MEASI Academy of Architecture, Chennai,

P. Samiiya, Ex-Zonal Chairman, Tiruchirappalli City Corporation, Dr. Ameenul Hussaini Bin Abdul Kader, Malaysia , Alhaj Kazi, S.a. Shaik Hassan Sahib, Qadiri, Government Town Kazi and Managing Trustee of Nagore Dargah Shariff, Dr. Habeebullah Khan Bin Abu Bakar Sidiq, Malaysia , G. Ramesh Kumar, FCA, Chartered Accountant, Trichy, M. Sawkath Ali , Area Warehouse Manager, Shuiba Water & Power Production Station, Kuwait, T.M.A. Abdul Malik, Joint Managing Director, Super Sonic Trading LLC Group, Dubai, UAE, K. M. Kabeer Moosa, Principal, Jamal Mohamed College Ayesha Girls Matric Hr.Sec. School, Trichy , D. ASHOK GANDHI , Vice President, All India Synthetic Gems Manufacturers and Dealers Association, S GOPAL, Prop: Sri Lakshmi Roadways, Trichy, Dr.A.M.Mohamed Sindhasha, Former Principal, Jamal Mohamed College, Trichy,

Dr. M. Hussain Munavar, Professor & Head, Department of Molecular Biology, School of Biological Sciences, CAS in Functional and Organismal Genomics, , Madurai Kamaraj University, Madurai,

M. S. Habeebur Rahman, Engineering Consultant, Chennai, Dr. K. Sathiyamurthy, Associate Professor, Department of Bio Medical Science, Bharathidasan University, Tiruchirappalli, Haja Sheik Allaudin, IT/E-commerce Manager and Director Revenue, Singapore, Dr. A. Mohamed Jaffar, Professor of Commerce, Tamilnadu Open University, Chennai.

A. Arunmozhithevan, Member of Parliament (Lok Sabha), Cuddalore Constituency, Haja Mohideen, CIO, Islamic Banking, Qatar, Noor Mohamed Abdul Malik, Project Manager, Tech Mahindra Ltd., Singapore, Abdul Karim Abdul Nazir, Associate Director, Banking, NCS PTE LTD, Singapore, N. Ameer Ahmad, General Manager, Travel Club Tourism Company, Kuwait, R. Rahamathullah, Director, Radiant IAS Academy, Villuppuram, Habibullah Noor Mohamed, Managing Director, MASS Education Institute, Singapore, Mohamed Siddique, Project Manager, IT, Mannai Corporation, Qatar, A. Nasheer Ahamed, Chief Executive Officer, Sixth Star Technologies, Chennai, Habeeb Rahman M.i. Sharfudeen, Contract Administrative Officer, Qatar , Ms. Sheerin Samsudeen, Specialist– Manage Direct Tax (United States), M/s. Shell India Markets Pvt Ltd (SBSC) – Chennai, Ms. Aiman Arisha, Senior Technical Analyst, CITY Global Service, California, USA. The Management Committee Secretary and Correspondent Dr. A.K. Khaja Nazeemudeen, President Janab. M.J. Jamal Mohamed Bilal Sahib, Treasurer Hajee.K.A.Khaleel Ahamed, Assistant Secretary Hajee.M.J.Jamal Mohamed, Member ee.K.N.S.A.Rahimathullah graced the occasion.

Dr. S. Mohamed Salique, Principal, Jamal Mohamed College welcomed the gathering and delivered Presidential Address, Hajee. Dr. S. Ismail Mohideen, Secretary, JMC Alumni Association presented the Annual Report. Dr. A.K.Khaja Nazeemudeen, Secretary & Correspondent, Hajee. M. J. Jamal Mohamed, Assistant Secretary, Hajee. S. M. Hidayathuallah, Chairman, JMC Alumni Chennai Chapter, Former Principals Hajee Dr. M. Sheik Mohamed and Dr. R. Khader Mohideen, Hajee S. M. Hithayathullah, Chairman, Chennai Chapter felicitated the awardees on the occasion.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2012-2014 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 18-8-2014 (திங்கட்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ | மலர் 37 இதழ் 246

முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி

திருச்சி, ஆக. 18–

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது.

கல்லூரி ஆட்சிமன்றக்குழு செயலரும், தாளாளருமான டாக்டர். ஏ.கே.காஜா நஜீமுத்தீன், தலைவர் எம்.ஜே. ஜமால் முகமது பிலால், பொருளாளர் கே.ஏ.கலீல் அகமது, உதவிச் செயலாளர் எம்.ஜே. ஜமால் முகமது, முன்னாள் தாளாளர் மற்றும் செயலர் எம்.ஜே.எம்.அப்துல் கபூர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர் கே.என்.எஸ்.ஏ.ரஹ்மத்துல்லா முன்னிலை வகித்தனர்.

சிங்கப்பூரிலிருந்து ஹாஜா சேக் அலாவுதீன், நூர் முகமது அப்துல் மாலிக், அப்துல் கரீம் அப்துல் நாஜிர், ஹபீபுல்லா நூர் முகமது, குவைத்திலிருந்து அமீர் அகமது, துபாயிலிருந்து அப்துல் மாலிக், மலேசியாவிலிருந்து டாக்டர். அமீனுல் உசைனி பின் அப்துல் காதர், கத்தாரிலிருந்து முகமது சித்திக், ஹபீப் ரஹ்மான் எம்.ஐ. ஷர்புதீன், ஹாஜா மொய்தீன், ஷார்ஜாவிலிருந்து ஏ. முகமது ஷாஜகான், கலிபோர்னியாவிலிருந்து அய்மான் ஆரிஷா ஆகியோரும் ஜமால் முகம்மது கல்லூரியின் சிறந்த முன்னாள் மாணவர் விருதினைப் பெற்றனர்.

திருச்சி மாநகராட்சி முன்னாள் தலைவர் சாமி அய்யா, பட்டய கணக்காளர் ரமேஷ் குமார்,ஜமால் முகமது கல்லூரி ஆயிஷா பெண்கள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் கபீர் மூஷா, செயற்கை கற்கள் உற்பத்தியாளர் சங்கங்களின் துணைத்தலைவர் அசோக் காந்தி, கோபால், ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் முதல்வர் முகமது சிந்தாஷா,

பாரதிதாசன் பல்கலைக்கழக பயோ மெடிக்கல் சயின்ஸ் துறையில் இணைப் பேராசிரியர் சத்தியமூர்த்தி, சென்னை அகாடமி இயக்குநர் அல்தாப் அகமது, பொறியியல் ஆலோசகர் ஹபீபுர் ரஹ்மான், பேராசிரியர் முகமது ஜாபர், நஜீர் அகமது, ஷீரின் சம்சுதீன், மதுரை காமராஜர் பல்கலைக்கழக மைக்ரோ பயோலஜி துறைத் தலைவர் ஹுசைன், நாகூர் அரசு டவுண் காஜி அல்ஹாஜ் சேக் ஹுசைன் சாகிப் காதிரி, விழுப்புரம் ரேடியன்ட் ஐ.ஏ.எஸ். அகாடமி இயக்குநர் ரஹ்மத்துல்லா, கடலூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அருண்மொழித்தேவன் ஆகியோர் ஜமால் முகமது கல்லூரியின் சிறந்த முன்னாள் மாணவர் விருதினைப் பெற்றுக் கொண்டு ஏற்புரை நிகழ்த்தினர்.

முன்னதாக கல்லூரி முதல்வர் முகமது சாலிகு வரவேற்று தலைமை உரையாற்றினார். ஜமால் முகம்மது கல்லூரியின் கூடுதல் துணை முதல்வர், நிதியாளர் மற்றும் முன்னாள் மாணவர் சங்க செயலர் இஸ்மாயில் முகைதீன் ஆண்டறிக்கை வாசித்தார். செயலர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே.காஜா நஜீமுத்தீன், உதவிச் செயலாளர் எம்.ஜே. ஜமால் முகமது, முன்னாள் மாணவர் சங்க சென்னைப் பகுதியின் தலைவர் எஸ்.எம். ஹிதாயத்துல்லா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மேலாண்மைத்துறை இயக்குநர் மற்றும் சுயநிதிப்பிரிவு நிதியாளர் அப்துல்சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் மற்றும் வருகைப்பதிவு பதிவாளர். அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முகமது பாஜில், ஜமால் முகமது யாசின் ஜுபைர், வருகைப்பதிவு பதி வாளர் மற்றும் வேதியி யல் துறைத் தலைவர் முகமது சிகாபுதீன், இயற்பியல் துறைத்தலைவர் ஜமால் முகம்து ஜாபர், விலங்கியல் துறைத்தலைவர் முகமது சம்சுதீன், காஜாமியான் விடுதி ஒருங்கிணைப்பாளர் முகமது சர்புதீன் ஆகியோர் விருது பெறுபவர்களை அறிமுகம் செய்தனர்.

முன்னதாக சமீபத்தில் மறைந்த கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர் ஜாபர்தீன், கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் நயினார் முகமது, முன்னாள் மாணவர் கோவிந்தசாமி, மலேசிய தமிழ் கவிஞரும் தஞ்சை தமிழ் பல்கலைக்கழக விருது பெற்றவருமான சீனி நைனார் முகமது, கல்லூரியின் முன்னாள் முதல்வர் முகமது இஸ்மாயில் மனைவி நூர்ஜஹான் ஆகியோருக்கு இரங்கல் தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிறைவாக கல்லூரி துணை முதல்வர் முகமது இப்ராகீம் நன்றி கூறினார்.

TMT கம்பிகளின் சூப்பர் ஸ்டார்
ASRM TRY
TMT கம்பிகள்
தயாரிப்பாளர்கள்:
A.P. ஸ்டீல்ஸ், திருச்சி-14.
Cell: 98424 56863 & 98422 18991
சிறந்த மனிதர்களின் சிறப்பான தேர்வு

தினமலர்
நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்
-TPTC Edition-

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)
14 AUG 2014
GENERAL LIBRARY, TRICHY-20

The Wedding Jewellers
TANISHQ
A TATA PRODUCT
TS No.50, No 6A, Fort Station Road, Behind St. Joseph's College Church, Trichy. Tel : 2708111/222.

திருச்சி ◆ வியாழன் ◆ ஆகஸ்ட் 14 2014 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | ◆18 பக்கம் 500 காசு ◆ மலர் 63 ◆ இதழ் 342

ஜமால் முகமது கல்லூரி விளையாட்டு தின விழாவில் தனிநபர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற பிரபாகரனுக்கு இந்திய தடகள முன்னாள் வீரர் ஞானசேகரன் கோப்பை வழங்கினார். அருகில் கல்லூரி தாளாளர் காஜா நஜீமுதீன், முதல்வர் முகமது சாலிக் உட்பட பலர்.

'விளையாட்டிற்கு முக்கியத்துவம்'

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் 64வது விளையாட்டு தின விழா நடந்தது.

கல்லூரி தாளாளர் காஜா நஜீமுதீன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் இந்திய தடகள முன்னாள் வீரர் ஞானசேகரன் கலந்து கொண்டு, போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு வழங்கி பேசுகையில், 'கல்லூரிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மாணவர்கள் பயன்படுத்தி தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வெற்றி தோல்வி குறித்து கவலைப்படாமல் போட்டியில் கலந்து கொள்வதற்கு மாணவர்கள் முக்கியத்துவம் தர வேண்டும். கல்லூரிகள் விளையாட்டிற்கு அதிக முக்கியத்துவம் தந்தால் சர்வதேச போட்டிகளில் இந்தியாவிற்கு அதிக பதக்கங்கள் கிடைக்கும்' என்றார். தனி நபர் பிரிவு போட்டியில் மாணவர் பிரபாகரன் சாம்பியன் பட்டம் பெற்றார். கல்லூரி உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா ஆண்டறிக்கை வாசித்தார்.

கல்லூரி முதல்வர் முகமது சாலிக் வரவேற்றார். துணை முதல்வர் முகமது இப்ராஹிம் நன்றி கூறினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மகளிருக்கான விளையாட்டு போட்டியில் சாம்பியன் பட்டம் பெற்ற ஆங்கிலத்துறைக்கு ஆசிய தடகள முன்னாள் வீராங்கனை காலின் ரீவ்ஸ் கோப்பை வழங்கினார். அருகில் கல்லூரி முதல்வர் முகமது சாலிக், உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா உட்பட பலர்.

'அனைத்திலும் சிறக்க வேண்டும்'

திருச்சி ஜமால் முகமது கல்லூரி மகளிர் பிரிவிற்கான விளையாட்டு போட்டிகள் நடந்தது. கல்லூரி தாளாளர் காஜா நஜிமுதீன் தலைமை வகித்தார். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு, ஆசிய தடகள முன்னாள் வீராங்கனை காலின் ரீவ்ஸ் கோப்பைகள் வழங்கி பேசுகையில், 'மாணவிகள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை பயன்படுத்தி விளையாட்டு துறையில் சாதிக்க வேண்டும். கல்வி, விளையாட்டு உட்பட அனைத்து துறைகளிலும் மாணவிகள் சிறந்து விளங்க வேண்டும். பெற்றோர் ஒத்துழைப்புடன் கல்வி, விளையாட்டு இரண்டிலும் சிறந்து விளங்கி நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும். தொலைக்காட்சி, செல்போன் இவற்றை தவிர்த்து, உங்கள் செயல்பாடுகளை அமைத்துக் கொண்டால் எதிர்காலம் பிரகாசமாக அமையும்' என்றார்.

போட்டியில் தனிநபர் சாம்பியன் பட்டத்தை சர்மிளா, ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை ஆங்கிலத்துறையும் பெற்றன. கல்லூரி முதல்வர் முகமது சாலிக் வரவேற்றார். நிகழ்ச்சியில் உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா உட்பட பலர் கலந்து கொண்டனர். உதவி உடற்கல்வி இயக்குனர் பிரதீப் குமார் ஆண்டறிக்கை வாசித்தார்.

TIRUCHIRAPALLI, MONDAY, AUGUST 18, 2014

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

Regd. TRY/062/2012-2014 • RNI No. TNENG/2004/49966 • ISSN 0971 - 751X • Vol. 11- No. 196 • CITY EDITION • 16 Pages • Rs. 5.00 • www.thehindu.in

18 AUG 2014
GENERAL LIBRARY, TRICHY-20

NEXT AIADMK LS LEADER PAGE 4

ED MILIBAND TO VISIT INDIA PAGE 8

97 KILLED IN NEPAL FLOODS PAGE 10

INNINGS WIN FOR ENGLAND PAGE 15

Printed at Chennai, Coimbatore, Bangalore, Hyderabad, Madurai, Noida, Visakhapatnam, Thiruvananthapuram, Kochi, Vijayawada, Mangalore, Tiruchirapalli, Kolkata, Hubli, Mohali, Allahabad, Malappuram, Lucknow, Anantapur and Nellore

VCK gets a breather
The Madras High Court has refused to allow a plea by the government to ban vehicles during the party's conference. Page 4

Fishermen's issue will be resolved
The Centre will resolve the fishermen's issue in such a way that they will get to fish in Palk Bay, says Pon. Radhakrishnan. Page 4

Tiruchi Connect
Calling all readers to connect with us for all things Tiruchi at
twitter - @TiruchiConnect www.facebook.com/Tiruchiconnect

MoU signed

Jamal Institute of Management has signed separate memorandum of understanding with the G.B.Engineering Enterprises Pvt.Ltd. and Sixth Star Technologies for corporate-institute collaboration activities. The MoUs provide for in-plant training for students, projects, placements and guest lectures.

A.K.Khaja Nazeemudeen Sahib, college secretary and correspondent of Jamal Mohamed College, signed the MOUs with B.Pattabhiraman, Managing Director of G.B.Engineering Enterprises, and A.Nasheer Ahamed, Chief Executive Officer of Sixth Star

The Jamal Institute of Management has entered into MoUs with two companies for industry-institute collaboration.

பிரியா
குக்கர் கேஸ்கட் Rs.60/-
MARLEX, BUTTERFLY, PREMIER
போன்ற எல்லா கம்பெனி குக்கர்களுக்கும் கிடைக்கும்

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.3.00

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:36 ★ 18.8.2014 திங்கள் மாலை ★ வெளியூர் 19.8.2014 செவ்வாய் ★ இதழ் 83)

T.NAGAR LKS
GOLDHOUSE PVT. LTD.
SINCE 1925
"LKS - GOLD" IS CASH IN HAND

Regd. No. TN/SR-21/2014

"குர்ஆனை மற்ற சமுதாய மக்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டியது கடமை"

ஜமால் முகமது கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பெரம்பூர் ஜமாலியா கல்லூரி முதல்வர் பேச்சு

திருச்சி, ஆக.18–

அரபிமொழி மூலம் குர்ஆனை கற்றுக் கொண்டு மற்ற சமுதாய மக்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டிய கடமை ஆலிம் பெருமக்களுக்கு உள்ளது என ஜமால் முகமது கல்லூரி அரபித்துறை சார்பில் ஆலிம் பட்டமளிப்பு விழாவில் சென்னை பெரம்பூர் ஜமாலியா அரபிக் கல்லூரி முதல்வர் மௌலவி சையது நயாஸ் அகமது ஜமாலி பேசினார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூயில் அரபித்துறை சார்பில் ஐந்து வருட படிப்பான பி.ஏ மற்றும் எம்.ஏ அரபிக் மற்றும் ஆலம் பட்டத்தோடு கடந்த 3 ஆண்டுகளாக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பிற எந்த கல்லூரிகளில் இல்லாத சிறப்பு ஜமால் முகமது கல்லூரியில் இந்த அரபித்துறை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

3ம் ஆண்டு அரபித்துறை சார்பில் ஆலிமினது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது, விழாவுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் எம். முகமது சாலிகு, தலைமை வகித்தார். அரபித்துறைத் தலைவர் முனைவர் சையது கயாஸ் அகமது அனைவரையும் வரவேற்று பேசினார். இந்த வருடத்தில் அரபித்துறையில் 11 பே◌ா் சென்னை பெரம்பூர் ஜமாலியா அரபிக் கல்லூரி முதல்வர் மௌலவி சையது நயாஸ் அகமது ஜமாலி ஆலிம் வழங்கி பட்டமளிப்பு உரை நிகழ்த்தினார்.

இங்கு பட்டம் பெறும் மாணவர்கள் தங்களது இல்முகளை கற்றுக் கொண்டு அதை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டியது கடமையாகும். அதேபோல் அரபிமொழி மூலம் குர்ஆனை கற்றுக் கொள்ள வேண்டும். கற்று மற்ற சமுதாய மக்களுக்கு அரபிமொழி மற்றம் குர்ஆனை கற்றுக் கொடுக்க வேண்டிய கடமையாகும். பட்டம் பெறும் மாணவர்களுக்கு நிறைய கடமை இருக்கிறது என்று கூறினார்.

விழாவில் அரபித்துறை பேராசிரியர்கள் முனைவவர் காஜாமொய்தீன், முனைவர் முகம்மது இஸ்மாயில், முனைவர் முகம்மது வாஜிப், முகம்மது இப்ராகிம், முகம்மது இஸ்மாயில் ஹசனி மற்றும் அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் முனைவர் பேராசிரியர் எம். அப்துல் காதர் நன்றி கூறினார்.

Poomex
பூமெக்ஸ்
பனியன்கள் • ஜட்டிகள்
திருச்சி ☎ 93459 12304

தினமலர்
நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்
–TPTC Edition–

புற்றுநோய்க்கு
ஜி.வி.என். மருத்துவமனை
0431-2700712, 2700811, 2705979, 2703945

JAMAL MOHAMED COLLEGE GENERAL LIBRARY, TRICHY
19 AUG 2014

♦ திருச்சி ♦ செவ்வாய் ♦ ஆகஸ்ட் 19 2014 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | ♦ 18 பக்கம் 500 காசு ♦ மலர் 63 ♦ இதழ் 347

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட வெளிநாட்டைச் சேர்ந்த பேராசிரியர்கள், கல்லூரி பேராசிரியர்கள் உட்பட பலர்.

ஜமாலில் கருத்தரங்கம்

திருச்சி ஜமால் முகமது கல்லூரி வணிக நிர்வாகவியல் மற்றும் வணிகவியல் துறை சார்பில் 'உலக பொருளாதாரத்தை மீட்டமைத்தல்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி தலைவர் ஜமால் முகமது பிலால், துணை செயலாளர் ஜமால் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். கருத்தரங்கை பாரதிதாசன் பல்கலைக்கழக பொருளாதார துறைத்தலைவர் அருள் செல்லகுமார் தொடங்கி வைத்து பேசினார். கருத்தரங்கின் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய தொகுப்பை கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளருமான காஜா நஜ◌முதீன் வெளியிட, முதல் பிரதியை கல்லூரி பொருளாளர் கலீல் அகமது பெற்றுக் கொண்டார். வெளிநாட்டைச் சேர்ந்த 6 சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். கேரளா மாநில இரு முதன்மை பேராசிரியர்கள் வேளாண்மையை ஊக்குவித்தல், கூட்டாண்மை மற்றும் கூட்டாளிகளின் தற்போதைய நிலைகள் மற்றும் பிரச்னைகளை களைவது தொடர்பான கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். பாரதியார், பாரதிதாசன், அழகப்பா பல்கலைக்கழக பேராசிரியர்கள் பல்வேறு சேவைகள் மற்றும் தொல்லியல் பொருட்களுக்கான உரிமைகள் குறித்து உரையாற்றினர். டில்லி பல்கலைக்கழக பேராசிரியர் தொழில் முனைவோர் மற்றும் வேலைவாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தார். வணிக நிர்வாகவியல் துறைத்தலைவர் முகமது சிந்தாஷா நன்றி கூறினார்.

JAMAL MOHAMED COLLEGE
ALUMNI ASSOCIATION
(SINGAPORE CHAPTER)

சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் முதல்வர் “பெரும்புலவர்” சி.நயினார் முஹம்மது நினைவுக் கூட்டம்

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை)யின் ஏற்பாட்டில், அக்கல்லூரியின் முன்னாள் முதல்வர், பெரும் புலவர் முனைவர் சி. நயினார் முஹம்மது, கடந்த 23-07-2014 அன்று அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில், தனது 85 வயதில் இறைவனடி சேர்ந்ததை முன்னிட்டு, அன்னாரின் கல்விப்பணியையும், தமிழ்ப்பணியையும், சமூகப்பணியையும் நினைவு கூர்ந்து, சிங்கப்பூர் பென்கூலன் பள்ளிவாசல் பன்னோக்கு அரங்கத்தில் சென்ற 03-08-2014 அன்று மாலை 4 மணியளவில் நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் ஆடிட்டர் ஹாஜி முஹிய்யத்தீன் அப்துல் காதர் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஜனாப் பரீஜ் முஹம்மது கிராஅத் ஓதி கூட்டத்தை துவங்கி வைத்தார். பெரும் புலவர் மர்ஹூம் சி. நயினார் முஹம்மது அவர்களைப் பற்றிய முக்கிய குறிப்புகளை, சங்கத்தின் துணைத்தலைவர் கலந்தர் மொஹிதீன் எடுத்துரைத்தார்

மூத்த எழுத்தாளர் ஜே.எம்.சாலி, பன்னூல் ஆசிரியர் டாக்டர் ஹிமானா சையத், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஹாஜி மு.அ. மசூது, பிரபல விரிவுரையாளர் அப்துல் கரீம், எழுத்தாளர் ஷாநவாஸ் அப்துல் காதர், கணிதப் பேராசிரியர் அமானுல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டு பெரும்புலவர் ஆற்றியப் பணிகளை நினைவுகூர்ந்தனர். பென்கூலன் பள்ளிவாசலின் இமாம், உஸ்தாத் ஹாஜி அப்துல் கையூம் பாகவி அவர்கள் சிறப்பு துஆ ஓதினார்கள். சமூகப் பிரமுகர்களும், கல்லூரியின் முன்னாள் மாணவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் 32 ஆண்டுகள் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும், பின்னர் 4 ஆண்டுகள் அக்கல்லூரியின் முதல்வராகவும் அரும்பணியாற்றியவர். பின்னர், தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். குன்றக்குடி அடிகளார் இவருக்கு “பெரும் புலவர்” பட்டம் வழங்கி பெருமிதப்படுத்தினார். திருக்குர்ஆனுடன் திருக்குறள் எப்படி ஒத்துப் போகிறது என ஆய்வுக் கட்டுரை எழுதி மதச்சார்பின்மைக்கு வித்திட்டவர். “குறள் ஞாயிறு” என்ற விருது பெற்ற பெருமகன் இவர்.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதனுடன் இணைந்து "தமிழக புலவர் குழு"வை உருவாக்கி அதன் செயலாளராக 28 ஆண்டுகள் பணியாற்றியவர். மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் "தமிழ்ச் செம்மல்" என்ற பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்தது.

"இஸ்லாமிய இலக்கியக் கழகம்" என்கிற அமைப்பை தோற்றுவித்து, ஐந்து அனைத்துலக இலக்கிய மாநாடுகளை நடத்தி அதன் மூலம் இஸ்லாமிய இலக்கியத்தை மக்களிடையே கொண்டு சேர்த்தவர். திருச்சி தமிழ்ச்சங்கத்தின் துணை அமைச்சராக இறக்கும்வரை இருந்தவர். உலகத் திருக்குறள் பேரவை இவருக்கு "திருக்குறள் நெறி தொண்டர்" என்ற விருது வழங்கி கௌரவித்தது. பல அரிய நூல்களை எழுதி, தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சமூகத்திற்கும் பெரும் பங்களிப்பை வழங்கிய பெருமைக்குரியவர்.

அவருக்கு மனைவி, மகள், நான்கு மகன்கள் உள்ளனர். பிள்ளைகள் அனைவரும் பொறியியல் நிபுணர்கள்.

அன்னாரின் மறுமை வாழ்வு ஈடேற்றம் பெற, எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் பாலிப்பானாக! ஆமீன்

தினமலர்
உண்மையின் உரைகல்

உலக தமிழர் செய்திகள்

சிங்கப்பூரில் நோம்பு திறப்பு நிகழ்ச்சி

சிங்கப்பூர் : திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), ஜூலை 19ம் தேதி அன்று சிங்கப்பூர் பென்கூலன் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு மற்றும் சமய இன நல்லிணக்க நிகழ்ச்சியை நடத்தியது. சிங்கப்பூரின் ஒற்றுமை, சமய மற்றும் இன நல்லிணக்கத்தைப் பறைசாற்றிய இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக பிரதம அலுவலக அமைச்சரும், இரண்டாம் உள்துறை மற்றும் வர்த்தக தொழில் அமைச்சருமான எஸ். ஈஸ்வரன் கலந்து கொண்டார். "இணையத்தின் வழியாக இன்று ஏற்பட்டு வரும் தாக்கங்களையும், நம்மை எதிர்நோக்கி வருகின்ற சவால்களை சமாளிக்கவும், நாம் ஒன்றுபட்ட சமுதாயமாக சமூக ஒற்றுமையுடன் தொடர்ந்து திகழ வேண்டியது பெரிதும் அவசியம்" என்று வலியுறுத்தினார் அமைச்சர் ஈஸ்வரன். சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் ஆற்றி வரும் கல்விசார்ந்த சமுதாயப்பணி மிகவும் பாராட்டுக்குரியது என்று அவர் வர்ணித்தார். வரவேற்புரை வழங்கிய சங்கத்தின் தலைவர் முனைவர் கணக்காய்வாளர் முஹிய்யத்தீன் அப்துல் காதர், சிங்கப்பூரின் உற்பத்தி திறன் பெருகுவதற்கு பங்களிக்கும் வகையில், இச்சங்கம் ஆற்றிய சமூகப்பணிகளைப் பற்றி எடுத்துரைத்தார். எம்.இ.எஸ்., குழுமத்தின் தலைமை நிர்வாகி எஸ்.எம்.அப்துல் ஜலீல், அமைச்சருக்கு பொன்னாடைப் போர்த்தி கௌரவித்தார். சங்கத்தின் துணைத்தலைவர் கலந்தர் மொஹிதீன் நன்றி கூறினார். கணிதப் பேராசிரியர் அமானுல்லாஹ் நிகழ்ச்சியை வழிநடத்தினார். சிண்டா, ஜாமியா சிங்கப்பூர், இந்திய முஸ்லிம் பேரவை மற்றும் பல சமூக அமைப்புகளிலிருந்து சமூகத் தலைவர்களும், சமூகப் பிரமுகர்களும், சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ஒற்றுமையையும், சமய இன நல்லிணக்கத்தையும் பறைசாற்றிய வண்ணம், இந்நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

மணிச்சுடர் 21/22.07.2014

சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க இஃப்தார்

அமைச்சர் ஈஸ்வரன் பங்கேற்று பாராட்டு

திருச்சி, ஜூலை 21–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சென்ற சனிக்கிழமை 19–07–2014 அன்று சிங்கப்பூர் பென்கூலன் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு மற்றும் சமய இன நல்லிணக்க நிகழ்ச்சியை நடத்தியது.

சிங்கப்பூரின் ஒற்றுமை, சமய மற்றும் இன நல்லிணக்கத்தைப் பறைசாற்றிய இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக பிரதம அலுவலக அமைச்சரும், இரண்டாம் உள்துறை மற்றும் வர்த்தக தொழில் அமைச்சருமான எஸ். ஈஸ்வரன் கலந்து கொண்டார்.

இணையத்தின் வழியாக இன்று ஏற்பட்டு வரும் தாக்கங்களையும், நம்மை எதிர்நோக்கி வருகின்ற சவால்களை சமாளிக்கவும், நாம் ஒன்றுபட்ட சமுதாயமாக சமூக ஒற்றுமை யுடன் தொடர்ந்து திகழ வேண்டியது பெரிதும் அவசியம்" என்று வலியுறுத்தினார். சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் ஆற்றி வரும் கல்விசார்ந்த சமுதாயப் பணி மிகவும் பாராட்டுக்குரியது என்று அவர் வர்ணித்தார். வரவேற்புரை வழங்கிய சங்கத்தின் தலைவர் முனைவர் கணக்காய்வாளர் ஹாஜி முஹிய்யத்தீன் அப்துல் காதர், சிங்கப்பூரின் உற்பத்தி திறன் பெருகுவதற்கு பங்களிக்கும் வகையில், இச்சங்கம் ஆற்றிய சமூகப்பணிகளைப் பற்றி எடுத்துரைத்தார்.

எம்.இ.எஸ். குழுமத்தின் தலைமை நிர்வாகி ஹாஜி எஸ். எம். அப்துல் ஜலீல், அமைச்சருக்கு பொன்னாடைப் போர்த்தி கௌரவித்தார். சங்கத்தின் துணைத்தலைவர் ஜனாப் கலந்தர் மொஹிதீன் நன்றி கூறினார். கணிதப் பேராசிரியர் அமானுல்லாஹ் நிகழ்ச்சியை வழிநடத்தினார்.

சிண்டா, ஜாமியா சிங்கப்பூர், இந்திய முஸ்லிம் பேரவை மற்றும் பல சமூக அமைப்புகளிலிருந்து சமூகத் தலைவர்களும், சமூகப் பிரமுகர்களும், சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ் முரசு
TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY

21 7 2014 திங்கள்

சமூக ஒற்றுமை அவசியம்: அமைச்சர் ஈஸ்வரன்

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), நேற்று முன்தினம் பென்கூலன் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு மற்றும் சமய இன நல்லிணக்க நிகழ்ச்சியை நடத்தியது. சிங்கப்பூரின் ஒற்றுமை, சமய மற்றும் இன நல்லிணக்கத்தைப் பறைசாற்றிய இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக பிரதமர் அலுவலக அமைச்சரும், இரண்டாம் உள்துறை மற்றும் வர்த்தக தொழில் அமைச்சருமான எஸ். ஈஸ்வரன் கலந்து கொண்டார்.

இணையத்தின் வழியாக இன்று ஏற்பட்டு வரும் தாக்கங்களையும், நம்மை எதிர்நோக்கி வருகின்ற சவால்களைச் சமாளிக்கவும், நாம் ஒன்றுபட்ட சமுதாயமாக சமூக ஒற்றுமையுடன் தொடர்ந்து திகழ வேண்டியது பெரிதும் அவசியம் என்று வலியுறுத்திய அமைச்சர், சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் ஆற்றி வரும் கல்விசார்ந்த சமுதாயப்பணியையும் பாராட்டினார்.

சிண்டா, ஜாமியா சிங்கப்பூர், இந்திய முஸ்லிம் பேரவை மற்றும் பல சமூக அமைப்புகளிலிருந்து சமூகத் தலைவர்களும் சமூகப் பிரமுகர்களும் சங்க உறுப்பினர்களும் அன்றைய நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

சமூகத் தலைவர்களுடன் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் அமைச்சர் எஸ் ஈஸ்வரன் (இடமிருந்து மூன்றாவது). படம்: பெரிட்டா ஹரியான்